உ

" ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

லண்டன் ஸ்ரீ முருகன் ஆலய
தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்

ஆடி - ஆவணி - புரட்டாதி - 1993
அன்பளிப்பு - 50p




லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ்

உ

# தென்னவன் சிவனின் திருவருட்டிறன் சொல்லும் தெய்வீக எழுத்துகள் எத்தனையோ அத்தனைக்கும் எங்களது ஆத்மீக வணக்கங்கள்

ஆசிரியர் குழுவும் ,வாசகர்களும்


**இணை ஆசிரியர்கள்**

மு.நற்குணதயாளன்
ச.ஆனந்ததியாகர்

**நிர்வாகத் தொடர்பு**

வ.இ.இராமநாதன்

**பொருளாதாரத் தொடர்பு**

சிவ.அசோகன்

**பொதுமக்கள் தொடர்பு**

மாணிக்கம் சுரேஷ்

**மகளிர் பகுதித் தொடர்பு**

திருமதி உமா ஜெயக்குமார்

**வெளியீடு**

சைவ முன்னேற்றச் சங்கம்(U.K)

**அச்சமைப்பும் வடிவமைப்பும்**

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகம்

**அச்சுப்பதிவு**

செல்வம் அச்சகம்



**தொடர்பு முகவரி**

**KALASAM**
**3,GAYFERE ROAD**
**CLAYHALL**
**ILFORD**
**ESSEX**
**IG5 OJG**
**ENGLAND**


"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

## உள்ளடக்கம்


ஆசிரியர் தலையங்கம்........................................1
கண்டவரின் உள்ளம்தனை.................................2
லட்சோப லட்சம்................................................3
முருகப் பெருமானின்.........................................5
கவீதைச்சோலை....... .......................................7
உலக இந்து மகாநாடு.........................................8
மௌனம்............................................................10
திருக்கோணேஸ்வரம்.....................................11
திருமுறைத்தேன்..............................................14
திருவாசகத்தேன்...............................................16
அவதாரம் ஓரு சிந்தனை...................................18
குறளோசை........................................................20
ஆவணிமூலம்....................................................21
பண்ணார் தேவாரத் திருமுறைகள்...................23
ஐயம் தீர்க்கும் அருளுரைகள்...........................25
எழுத்துலகில் இளைய நெஞ்சங்கள்..................27
ஆங்கிலக் கட்டுரை...........................................29



எம்பெருமான் திருமுருகனின் தேர் உற்சவக் காட்சியினை அட்டையில் வண்ணத்தில் அச்சிட மனமுவந்து உதவிபுரிந்த நண்பர் திரு மகேஸ்வரன் திருநாவுக்கரசு அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகள்

மணி 1 ஒலி 3

உ

அன்பு வணக்கங்கள்


மூன்றாவது தடவையாகச் சந்திக்கிறோம்.
பகீரதப் பிரயத்தனங்களும் துன்பங்களும்
நிறைந்த சுகப்பிரசவமாக மூன்றாவது கலசம்,
இப்போ உங்கள் கைகளில் அழகாகச்
சிரித்துக் கொண்டிருக்கின்றது.
வீதிகளில் எம்பெருமான் –எழிலோன்–
வள்ளி மணாளன் –லண்டன்ஸ்ரீமுருகன்
சிங்காரத் தேரிலேறி சிறுமணிகள்
கலகலவென்று ஓசை எழுப்ப
மந்திர உச்சாடனங்கள் வானை முட்ட
பக்த கோடிகளின் பக்தகானங்கள்
வளிமண்டலத்தை நிரப்ப வலம்
வந்து கொண்டிருக்கின்றான்.
அவன் தேரமர்ந்திருக்கும் திருக்கோலத்தை
வண்ண அட்டையிலே தாங்கி அவன் தந்த
தத்துவங்களை ஆகமங்களை உள்ளே கொண்டு,
குறைந்த விலையில் நிறைந்த பொருளோடு
கலசம் மூன்று உங்கள் கைகளில்
தவழ்ந்து கொண்டிருக்கின்றது.
உங்களுக்காகத் தங்கள் சேவைகளைத்
தந்து கொண்டிருக்கும்
சைவ முன்னேற்றச் சங்கத்தின்
இதயநாதமான ' கலசம்' இன்னுமின்னும்
ஆயிரமாயிரம் பணிகளைச் செய்யத் தயாராக இருக்கிறது.
இப்பாரிய பணிகளின் வடத்தினை
வலுவாகப் பற்றியிழுத்தபடி உங்கள்
மத்தியில் உங்களோடு ஒருவராக
திருமுருகனின் பாதாரவிந்தத்தைப்
பணிந்து சேவை புரியக் காத்திருக்கும்

இணை ஆசிரியர்கள்

மு.நற்குணதயாளன் — ச. ஆனந்ததியாகர்

ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

# கண்டவரின் உள்ளந்தன்னைக் காந்தமெனக் கவரும் கந்தன்



எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் பரம்பொருள். ஆன்மாக்களுடைய ஆணவம், கன்மம், மாயையாகின்ற பாசங்களை விலக்கி நல்வழிப்படுத்துவதற்காக வேண்டி நாமெல்லோரும் எளிதில் வழிபடக்கூடிய வண்ணம் உறைந்து அருளக்கூடிய புண்ய ஸ்தானங்களே

## சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்

திருத்தலங்களாகும். உலகின் பல பாகங்களில் வாழுகின்ற மனித இன வழிபாட்டு முறையில் வேறுபாடுகள் காணப்படினும், இறையுணர்வு இன்றியமையாதது என்பது ஏதாவதொரு காலகட்டத்தில் அனைவருக்கும் நன்கு புலப்படும். அல்லது இறைவனால் புலப்படுத்தப்படும். ஆசிய கண்டத்தின் தென்திசையில் தமிழ் மொழியை தாயாகக் கொண்டு மெய்யறிவு படைத்த நமக்கு நமது முன்னோர்கள் காட்டிய பத்தி உணர்வு மிகவும் மேலானது. ஆறு சமயங்களுடைய சிந்தனைகளை ஒன்றிணைத்து வடமொழியிலும், தமிழ்மொழியிலும் பல அரிய பாமாலைகளைத் தொகுத்திருக்கின்றார்கள். இறைவனையும், சமயத்தையும், நல்வாழ்க்கை முறையினையும் இது இப்படித்தான் என்று உறுதியாக எழுதி வைத்திருக்கின்றார்கள். இத்தோடு கூட மெய்ஞானத்தோடு விஞ்ஞானத்தையும் கலந்து காலத்தையும் கணக்கிட்டு ஆசைகளை வென்று பேரின்பத்தை அனுபவிக்கக்கூடிய பக்குவத்தையும் போதித்துச் சென்றிருக்கின்றார்கள். இவையனைத்தையும் சாதிப்பதற்கு இறைவனின் அருளும் ஆணையும் நிச்சயம் வேண்டும் என்பதை உணர்ந்து இறைவனாலேயே வழிகாட்டப்பட்டு இறை வழிபாட்டினை முறைப்படுத்தி வைத்திருக்கின்றார்கள். இந்த வழியில் அமைக்கப்பட்டவைதான் ஆலயங்கள். அவைகளில் நடைபெறும் உற்சவங்களும் தத்துவரீதியாக வரையறுக்கப்பட்டவை. எங்கெங்கு ஆலயங்கள் உள்ளதோ அங்கெல்லாம் திருவிழாக்கள் நடத்தப்பட வேண்டும். மக்கள் நாடிச் செல்ல வேண்டும்.

எந்த கோயிலில் திருவிழா நடந்தாலும் தேர்த்திருவிழா முக்கியமாக நடத்தப்படுகின்றது. ஆன்மாக்களுடைய கர்ம வினைகள் அழிவதற்காக இறைவனுடைய ஸம்ஹார கிருத்தியத்தை விளக்கும் வண்ணம் நிகழ்த்தப்படுகின்ற தேர்த்திருவிழா எங்கு நடைபெற்றாலும் மக்கள் அங்கு கூடுவது சிறப்பானது.

மேலைநாடுகளில் வாழுகின்ற நம் மக்களுக்கு இது போன்ற திருவிழாக்களை காணும் வாய்ப்பு மிகவும் அரிதானது. ஆயினும் லண்டன் வாழ் மக்கள் கொடுத்து வைத்தவர்கள்.

இங்கிலாந்து நாட்டின் லண்டன் மாநகரில் கோயில் கொண்டு விளங்கும் லண்டன் ஸ்ரீ முருகன் ஆலய தேர்த்திருவிழா ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 15.8.93 அன்று நடைபெறும் 10ஆவது ஆண்டு தேர்த்திருவிழாவை நாமெல்லோரும் கண்டு களித்து லண்டன் ஸ்ரீமுருகன் அருளைப் பெற்று மகிழ்வோமாக.

ஓம் சரவணபவ!

# லட்சோபலட்சம் மக்களுக்கோர் லண்டன் ஸ்ரீ முருகன்

சைவசமயத்தவர்கள் தாம் சென்ற இடமெல்லாம் அன்புக்கடவுளாம் முருகனுக்கு ஆலயம் அமைப்பது தொன்று தொட்டு வழங்கி வரும் ஒரு வழக்கு. அந்நியதிகளுக்கிணங்க பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் தலைநகராம் இலண்டன் மாநகரத்தில் முருகனின் அன்பர்கள் ஒரு சிலர் சேர்ந்து, 1975ஆம் ஆண்டு சித்திரை மாதம்



வருடப்பிறப்பன்று 20B Harringtyn squre என்னுமிடத்தில் ஸ்ரீமுருகன் ஆலயம் எனும் அமைப்பை தோற்றுவித்தார்கள். இவ்வமைப்பின் முதல் கட்டமாகவும் ஆலயப்பணியில் கூடிய அன்பர்களை பங்கெடுக்கப்பண்ணும் நோக்கத்துடனும் ஒக்ஸ்போ்ட் (Oxford) வீதியில் அமைத்திருந்த பழைய பாரதீய வித்ய பவன் மண்டபத்தில் ஒவ்வொரு மாதமும் முருகன் படத்தையும், முருகனின் சத்தியாகிய வேலையும் வைத்து அபிஷேகங்கள், அர்ச்சனைகள், கூட்டுப் பிராத்தனைகள் செய்யப்பட்டு வந்தது. பக்தர்களின் கூட்டம் அதிகரித்த வேளையில், இம்மாதாந்த வழிபாடு கிரெகரி மண்டபத்துக்கு மாற்றப்பட்டது. இம்மாத பூசைகளின் இறுதியில் கர்நாடக இசைக்கச்சேரி, சமயச்சொற்பொழிவுகள், பரத நாட்டியம் போன்றனவும் இடம் பெறத் தொடங்கின.

இவை ஒரு புறம் இருக்க, இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கான நிரந்தரக் கட்டிடத்தை அமைக்கும் முயற்சியாக, பல அன்பர்களிடம், தமிழ் நிறுவனங்களிடம் நிதியுதவி பெறப்பட்டு வந்தது. இவ்வாலயத்தின் கட்டிட அமைப்புக்காக இந்நாட்டில் மட்டுமல்லாமல் இந்துக்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கிருந்து எல்லாம் நிதி கிடைக்க ஆரம்பித்தது. இந்நிலையில் மத்திய இலண்டனில் இடம்பெற்று வந்த பூஜை இலண்டன் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள ஈஸ்ட்காம்(Eastham) பகுதிக்கு மாற்றப்பட்டது. இப்பகுதியில் ஏராளமான தமிழ் மக்கள் வசித்து வந்தனர். இதன் காரணமாக மாதாந்த பஜனைகளுக்கு வரும் அன்பர்களின் தொகை பல மடங்காக அதிகரித்தது.

கண்டு கேட்டவர்
மாணிக்கம் சுரேஷ்

முருகன் ஆலயத்துக்கான நிரந்தர அமைவிடம் ஈஸ்ற்காமிலேயே அமைய வேண்டுமென முருகன் அவாக் கொண்டான். நிர்வாக அமைப்பினரின் முயற்சியினால் 78 சேர்ச் வீதியிலுள்ள கட்டிடம் முருகன் ஆலயத்தின் அமைப்பிடமாக 1983 ஆம் ஆண்டு தை மாதம் வாங்கப்பட்டது. தொடர்ந்து பல திருத்த வேலைகளின் பின்னால் 1983 ஆம் ஆண்டு ஆவணி மாதம் மாதாந்த பூஜைகள் இங்கு மாற்றப்பட்டன.

இதன் பின்னால் பல அன்பர்களின் அயராத உழைப்பினாலும் ஸ்தபதிகளின் கை வண்ணத்தினாலும் முருகு என்றால் அழகு என்பதற்கு இயைந்தது போல் அழகிய முருகன் ஆலயம் உருக்கொண்டது. 1984 ஆம் ஆண்டு தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது போல் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் சைவசமயத்தின் மூலக்கருவாகிய தென் னிந்தியாவிலிருந்து வந்த வேதாகம பண்டிதர்களான சிவஸ்ரீ திருவாடானை ஐயாமணி சிவாச்சாரியார், சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் சிவஸ்ரீ ரி.எஸ் சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் ஆகியோரது மந்திர முழக்கங்களோடும் பக்தர்களின் அரோஹரா கோஷத்தோடும் ஒரு பெருவிழாவாக இனிதே நிறைவேறியது.

ஆலயத்துக்கும் பொதுமக்களுக்கும் உடைய தொடர்பு பற்றிக் கேட்டபோது ஆலயத்தின் தற்போதைய நிர்வாகக்குழுவின் சார்பில் தலைவர் பதிலளிக்கையில் ஆலயம் கூடுதலாக இளைய தலைமுறையினரின் கலைவளர்ச்சியில் கூடிய ஆர்வம் கொண்டுள்ளதாகவும் இதற்காகவே கோயில் கட்டடத்தில் கலைவகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிட்டார். இந்த வகுப்பில் பயின்று வரும் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்தோடு இப்பிள்ளைகளின் திறமைகள் கோயிலில் நடைபெறும் சிறப்பு நாட்களில் நடாத்தப்படும் கலைநிகழ்ச்சிகள் மூலமாக வெளிக்காட் டப்பட்டுள்ளன என்றும் , மற்றும் பல இளைஞர்கள் தாங்கள் கேட்காமலே வந்து ஆலய சுத்திகரிப்பு வேலைகளில் வாரம் தோறும் வந்து ஈடுபடுகின்றார்கள் என்றும் சொன்னார்.

ஆலயத்தில் நடைபெறும் சிறப்பு விழாக்கள் பற்றிய கேள்விக்கு விடையளித்த நிர்வாகத்தினர் ஐரோப்பாவில் தேர்த்திருவிழா நடக்கும் ஒரே ஆலயம் இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலயம் ஒன்று தான் என்று பெருமையுடன் குறிப்பிட்டு, இந்த முறை 10வது தடவையாக

தேர்த்திருவிழா வருகின்ற மாதம் 15 ஆம் திகதி வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது என்றும், இம்முறை 10 ஆயிரம் பேர் வரை வருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்கள். அன்பர்களின் அரோகரா கோஷங்கள் பஜனைகள், பக்தி கானங்களுடன் மிகவும் அழகான ஊர்வலமாக இடம்பெற்று வருகின்றது.

மற்றும் தைப்பூசத்திருவிழா இங்கு நடைபெறும் மற்றுமொரு சிறப்பான நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சியின் போது மிகக்கூடிய எண்ணிக்கையில் பக்தர்கள் கூடுவதாகவும் அன்று பல பக்தர்கள் பால்குடம், காவடி, எடுத்து முருகனுக்கு தங்களுடைய நேர்த்திக்கடன்களை







முடிப்பார்கள். இத்தினம் முருகனுக்கு மிகப்பெரிய பாலாபிஷேகம் நடைபெறும் ஒரு திருநாளாகும், உலக மாதாவாகிய சக்தியின் ஒன்பது நாட்களும்(நவராத்திரி) மிகச்சிறப்பாக நடைபெறுகிறது என்றும் குறிப்பிட்டார்கள்.

இடையிலே ஆலயக்குருக்களின் தெரிவு சம்பந்தமாக ஒரு கேள்வி கேட்கப்பட்டபோது, மிக உற்சாகத்துடனும் பெருமையுடனும் இன்று ஆலயத்தின் வளர்ச்சிக்கும் பெருவாரியான பக்தப் பெருமக்களைக் கொண்டுள்ளமைக்கும் பிரதான காரணகர்த்தாக்கள், குருக்கள்மார்தான் என்று அடித்துச் சொன்னார்கள். ஆலயத்துக்குக் குருக்கள் தெரிவு செய்யப்படும் போது மிகக் கவனமாகத் தெரிவு செய்வதாகவும் இத் தெரிவை பெரும்பாலும் தங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சிவாச்சாரியார் அவர்களே தெரிவு செய்வதாகவும் கூறினார்கள்.அத்தோடு குருக்களைத் தெரிவு செய்யும்போது அவர்களின் கல்வித்தகைமை மற்றும் கடந்த காலங்களில் ஆலயங்களில் கடமையாற்றிய அனுபவம் ஆகியவை கருத்திற் கொள்ளப்படுகின்றன. மேலும் கூறுகையில் தங்களுடைய நிர்வாகக்குழுவின் முடிவின்படி இங்கு வந்து பணியாற்றும் குருக்களின் பணிவிடைக் காலம் இரண்டு வருடங்களாக வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டபோது அதற்கான காரணத்தையும் நாம் வினவினோம். அப்போது அவர் இந்தியாவிலே பல படித்த அனுபவமுள்ள குருக்கள்மார் உள்ளதாகவும் அவர்களில் பலருக்கு வெளிநாடு வந்து பணியாற்றும் சந்தர்ப்பத்தை கொடுப்பதற்காகவுமே தாங்கள் அப்படிச் செய்ததாகக் கூறினார். ஆலயத்தின் எதிர்காலத் திட்டங்கள் சம்பந்தமான வினாவுக்கு மிகச் சந்தோஷத்துடனும் பதிலளித்தார்கள். எதிர்காலத்தில் கோயிலிலுள்ள ஒவ்வொரு கடவுளருக்கும் கோபுரங்கள் கட்டி முருகனுக்கு இராஜகோபுரம் அமைத்து முருகனுடைய ஏழாவது படையாக லண்டன் ஸ்ரீ முருகனை ஆக்க வேண்டும் என்பது தங்களின் லட்சியமென உத்வேகத்துடன் கூறினார்கள். பல தொழில் அதிபர்கள் பண உதவி செய்ய முன்வந்துள்ளதாகவும் தங்களுடைய திட்டத்திற்கு அண்ணளவாக ஒரு மில்லியன் பவுண் தேவைப்படலாம் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறினார்கள். எம்பெருமான் முருகன் மீது பாரத்தைப்போட்டு முழு நம்பிக்கையுடன் இப்பணியை தாங்கள் ஆரம்பிக்கவிருப்பதாக உற்சாகத்துடன் கூறினார்கள்.

கலசம் பத்திரிகை உலக நாடுகள் எல்லாவற்றுக்கும் செல்ல வேண்டுமென்றும் இந்து மதத்தின் விழுமிய கோட்பாடுகளை உலகெலாம் பரவும் வகை செய்ய வேண்டுமென்றும் கூறினார்கள். இதற்கு உங்களின் பங்களிப்பு எப்படியானதாக இருக்குமென்ற எங்களின் வினாவுக்கு தாங்கள் போதுமான அளவு சந்தா சேர்த்துத் தருவதாக உறுதியளித்தார்கள். முருகப்பெருமானை முன்னிட்டு அவர்கள் எடுக்கின்ற சகல முயற்சிகளும் வெற்றியளிக்க வேண்டும் என கலசம் சார்பாகவும் கலச வாசகர்கள் சார்பாகவும் சைவ முன்னேற்ற சங்கத்தின் சார்பாகவும் மீண்டும் ஒருமுறை தந்தைக்கு மந்திரம் சொன்ன சுவாமி நாதனை , திருமுருகனை லண்டன் ஸ்ரீமுருகனை வேண்டி அவர்களிடம் இருந்து விடைபெற்றோம்.

### தாழம்பூவிடம் தாயின் கருணை

நான்முகனும் மஹாவிஷ்ணுவும் சிவனின் முடியையும் அடிமையும் காண முயன்றனர். மஹாவிஷ்ணு பூமியினுள் வெகுதூரம் கடந்து சென்றும், சிவனின் அடியினைக் காண முயன்று மேல்நோக்கி கடும்பயணம் செய்தும், சிவனின் முடியினைக் காண இயலவில்லை. மேலும் தொடர்ந்து கொண்டிருக்கும் போது வழியில் ஒரு தாழம்பூ வருவதைக் கண்டார். தாழம்பூவிடம் "எங்கிருந்து வருகின்றாய் ?"என்று கேட்டார் நான்முகன். "நான் சிவனின் முடியில் இருந்து வருகின்றேன்" என்றது தாழம்பூ. நான்முகன் தாழம்பூவிடம் இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்று கேட்கவே, நான்முகனிடம் இன்னும் வெகு தூரம் செல்ல வேண்டும் தொலை சென்றாலும் சிவனின் முடியைக் காண இயலாது என்று கூறியது தாழம்பூ.

எப்படியாவது சிவனின் முடியைக் காண வேண்டும் என்றும்,இல்லாவிட்டால் சிவனின் முடியைக் கண்டுவிட்டோம் என்று சொல்ல வேண்டும் என்று எண்ணினார் நான்முகன்.


தாழம்பூவை சாட்சியாக கொண்டு சிவனின் முடியைக் கண்டு வந்ததாகக் கூறினார். உண்மையை அறிந்த சிவனுக்கு தாங்கொணாத கோபம். கடும்கோபத்துடன் பொய்சாட்சி சொன்ன தாழம்பூவை , தான் இனிமேல் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று கூறிவிட்டார்.

தாழம்பூவின் பரிதாப நிலைமை அன்னையின் மனதை உருக்கியது. தன் நாயகனால் வெறுத்து ஒதுக்கப்பட்டதாழம்பூவை அன்னை அபிராமி ஏற்றுக்கொண்டாள்.இதனால் சிவன் ஆலயங்களில் தாழம்பூ சாத்துவதில்லை. ஆனால் ஈஸ்வரிக்கு தாழம்பூவைச் சாத்துகின்றார்கள் தந்தை வெறுத்து ஒதுக்கினாலும் தாய் அன்புடன் அணைத்துக்கொள்கிறாள் என்பதை இந்நிகழ்ச்சி விளக்குகின்றது.

–குன்றக்குடி அடிகளார்–

# முருகப்பெருமானின் திருப்பெருவடிவக் காட்சி
## (விஸ்வரூபக் காட்சி)

அசுரகுலத்தில் தோன்றிய சூரபன்மன் சிவபெருமானை வேண்டிப் பலகாலம் வேள்வி ஒன்று செய்தான். சிவ பெருமான் காட்சி கொடுத்தருளி அவன் 1008 அண்டங்களை 108 யுகம் அரசாளவும் , தேவர்களை வெற்றிகொண்டு அவர்கள் அவன் பணிகேட்டு நடக்கவும்,



சிவனுடைய சக்தியாலன்றி வேறு யாராலும் அழியாதிருக்கவும் வரமளித்தார். வரம்பெற்ற சூரன், தேவர்களை வென்று அவர்களில் சிலரைச் சிறையிலிட்டும், சிலரைத் தனது குற்றேவல்களைச் செய்யப்பண்ணியும் பலவாறு வதைத்தான். தேவர்கள் சிவனிடம் முறையிட்டு இறைஞ்ச சிவபெருமான் தமது நெற்றிக்கண்களிலிருந்து ஆறுமுகக்கடவுளைத் தோற்றுவித்துச் சூரனைச் சங்காரம் செய்ய விடுத்தருளினார். சிவனின் சக்தியேயான ஆறுமுகப்பெருமான் சிவனின் வேறல்லர்.

குமரப்பெருமான் சிறுவன்போலவே யுத்தக்களத்தில் சூரபன்மனோடு போர் செய்யத்தொடங்கினார். அவனோ! இந்தச் சிறுவனா நம்மை வெல்ல வல்லன் எனத் துச்சமாக எண்ணினான். நடந்த யுத்தத்தில் சூரன் வரம் பல பெற்றிருந்தும், ஆறுமுகக்கடவுளைத் தோற்கடிக்க முடியவில்லை. அவனுடைய சேனைகள் யாவும் அழிந்தன. அவன் விடுத்த படைக்கலங்கள் எவையும் முருகனை ஒன்றும் செய்ய இயலவில்லை. களத்தில் தனித்து நின்ற சூரபன்மனுக்கு குமரக்கடவுள் தம்முடைய விஸ்வரூபத்தைக் காட்டியருளினார். ஆணவமே மிக்கிருந்த சூரன், அத்திருப் பெருவடிவத்தைக் காண்பதற்கு வேண்டிய நல்லறிவையும் பெருமான் அவனுக்குக் கொடுத்தருளினார். " காண்பார் ஆர் கண்ணுதலே காட்டாக்காலே" என்னும் ஆப்தவாக்கியம் இறைவனைக் காண்பதற்கும் அவன் திருவருள் துணையின்றி தம்முயற்சியால் மட்டும் முடிவதொன்றல்ல என்பதை விளக்கும்.

ஆறுமுகப்பெருமானின் விஸ்வரூபத்தைச் சூரபன்மன் பார்த்தபோது உலகம், திக்கு, மாறிலாப் புவனம், அண்டம், வானவர், உயிர்கள் யாவும் அவர் திருமேனியில் அமைந்திருத்தலை உணர்ந்தான். அப்பெருவடிவின் உள்ளங்காலில் மலைகளும், புறங்காலில் நீர்நிலைகளும், இவைபோல ஏனைய அங்கங்களில் அண்டங்கள், புவனங்கள் தேவர்கள் ஏனைய உயிர்வர்க்கங்கள், சூரியசந்திரர், வாயு, சகல சாஸ்திரங்கள், ஞானம், பிரணவம் ஆகிய உயிருள்ளனவும், உயிர் இல்லாதனவுமாகிய எல்லாமே இருப்பதையும், சிரசின்கண் பரம ஆன்மாவாகிய பரா பரப்பொருளும் பொருந்தியிருப்பதைக் கண்டான். அந் நிலையில் பெருமான் வடிவில் சூரன் அனைத்துப் பொருள்களையும் கண்டான் என்பதும், அவன் கண்ட அனைத்துப் பொருள்களிலும் இறைவனைக் கண்டான் என்பதும் ஒன்றே. எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காண்பதே மெய்ஞானமாகும். "பரத்தை மறைத்தது பார்முதற் பூதம் பரத்தில் மறைந்தது பார்முதற் பூதமே" என்பது திரு மூலர் திருவாக்கு.

ஆதியும் அந்தமும் இல்லாத இவ்வடிவைக் கண்ட சூரன் விம்மிதனாகி நின்றபோது அவனுக்கு எம்பெருமான் சற்றே மெய்ஞ்ஞானம் பாலித்தருளினார். அப்போது அவன் அளவில்லாத தன் சேனைகள் முழுவதையும் அழித்து தனது தேரையும் மீண்டு வாராவகை தடுத்து, தான் தூண்டிய படைகள் யாவற்றையும் நீக்கி தன் மாயம்


மு.சிவராசா
யாழ்ப்பாணம்


முழுவதையும் மாற்றி இப்பெருவடிவைக் காட்டினான் என உணர்ந்தான். "அழகிய மயிலில் வந்த இவனைச் சிறுவனென்று நினைத்தேனே. திருமால் பிரமனும் அறியமுடியாத மூலமூர்த்தியாம் தன்மையை முன்னரே உணர்ந்தேனில்லை. ஒற்றனாக வந்த வீரவாகு சொன்னதையும் நம்பவில்லை. நிகரில்லாதவராக இங்கு காட்சிதரும் இவ்வடிவமோ என்றால்,

*"ஆயிரகோடிகாமர் அழகெலாம் திரண்டொன்றாகி*
*மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந்தன்னின்*
*தூயநல் லெழிலுக்காற்றா தென்றிடில் இனையதொல்லோன்*
*மாயிருவடிவுக் கெல்லாம் உவமையார் வகுக்கவல்லார்"*

எனது தம்பி சிங்கமுகனும் ,மகன் இரணியனும், வேலாயுதம் தாங்கிய இவரைச் சிறுவன் என எண்ண வேண்டாம் ' என்று கூறிய புத்திமதியையும் இகழ்ந்தேன். இப்பெருமானின் வடிவை அடிமுதல் முடிவரையும் அளவில்லாதகாலம் பார்த்தாலும் கண்ணில் அடங்காது.

கருத்தில் அடங்காது. என்னிடம் கொண்ட அளப்பரும் கருணைகாரணமாக அல்லவோ இவர் என்னோடு போர் செய்யும்படி வந்தார். இப்போது என் கோபம் முற்றும் ஒழிந்தது. போரில் ஊக்கம் தீர்ந்தது. மயிர்க் கூச்செறிகின்றது. கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகுகின்றது. உள்ளமும் நெருப்பிடைப்பட்ட மெழுகாக உருகுகின்றது. என் அகந்தை போயிற்று. நல்லறிவு பெற்றுவிட்டேன். நான் செய்த தவப்பயனால் இந்த நாயகன் திருப்பெருவடிவம் காணப்பெற்றேன். இப்போது–

*"சூழுதல் வேண்டும் தாள்கள்*
*தொழுதிடல் வேண்டும் அம்கை*
*தாழுதல் வேண்டும் சென்னி*
*துதித்திடல் வேண்டும் தாலு (தாலு–நாக்கு)*
*ஆழுதல் வேண்டும் தீமை*
*அகன்று நான் (நான் என்னும் அகந்தை நீங்கி)*
*இவற்கு ஆளாகி வாழுதல் வேண்டும் நெஞ்சம்*
*தடுத்தது மானம் ஒன்றே."*

என ஏங்கிய சூரபன்மன் 'நான் தேவரைச் சிறை செய்ததும் துன்புறுத்தியதும் தவறு எனப் பலர் கூறினர். ஆயின் அவ்வாறு செய்தபடியால் அல்லவா இவர் இங்கு வரும் பேறு பெற்றேன்.'என மகிழ்வுகொண்டான்.

(குறிப்பு–இத்திருப்பெருவடிவக் காட்சி கந்தபுராணத்தில் வரும் மிக முக்கியமான பகுதியாகும்.)

## இடி இடிக்கும்போது ஏன், அர்ச்சுனா அபயம் என்கிறோம்?

இன்றைக்கும் கிராமப்புற மக்களிடம் இந்தப் பழக்கம் இருப்பதைக் காணலாம். இடிச் சத்தம் கேட்டால் போதும். உடனே, 'அர்ச்சுனா அபயம்' என்று கூறும் வழக்கம் இன்றும் சில கிராமப்புற மக்களிடம் வழக்கில் உள்ளது. இதற்குக் காரணம் பஞ்சபாண்டவர்கள் ஐவரும் ஐந்து தேவர்களின் அருளால் பிறந்தவர்கள் என்பது பாரதம் கூறும் உண்மை. இதில் இந்திரனின் அருள் பெற்று ஜனித்தவன் அர்ச்சுனன். இந்திரனின் கட்டுப்பாட்டில் உள்ளவை மழை–இடி–மின்னல் எல்லாம். 'அர்ச்சுனன் பெயரை உச்சரித்து, அவனிடம் அபயம் அடைபவர்களை தான் ஒன்றும் செய்யமாட்டேன் ' என்று இந்திரன் வாக்குத் தந்திருந்தான் என்னும் மாகாபாரதச் சம்பவம் ஒன்றையும் ஆதாரமாகக் கூறுவார்கள் பெரியோர்கள்.

ஒரு நல்ல பழக்கம் வலுப்பெற இந்தக் கதை உதவினாலும் இதற்கு விஞ்ஞான ரீதியிலான விளக்கம் ஒன்றும் உண்டு.

நமது காதின் உள்ளே மெல்லிய சவ்வு ஒன்று உள்ளது. ஒலி அலைகளை வாங்கி அது அதிர்வதால்தான் நம்மால் கேட்கிறது. இந்த சவ்வு போன்ற பகுதி வெளிக்காற்றினால் அழுத்தப்படுகிறது. அதனை ஈடுசெய்ய காதின் சவ்வையும், தொண்டையையும் இணைக்கும் ஒரு காற்றுக் குழாய் இருக்கிறது. வாயின் மூலம் இதில் புகும் காற்று, உட்புறமாக சவ்வை அடைந்து வெளிக்காற்றின் அழுத்தத்திற்கு ஈடுசெய்கிறது. இடியோசை கேட்கும் போது, சவ்வின் வெளிப்பகுதி அதிக அழுத்தத்திற்கு ஆளாகிறது. அதனை ஈடுசெய்து சவ்வைப் பாதுகாக்க உள்ளே உள்ள காற்றுக்குழாயில் போதுமான காற்றுவேண்டும். உரத்த குரலில் ' அர்ச்சுனா அபயம்' என்றோ, 'அப்பனே முருகா' என்றோ சொல்லும்போது வெளிக்காற்று தொண்டை வழியே சென்று காற்றுக் குழலை நிரப்பி சவ்வைப் பாதுகாக்கிறது.

## கவிதைச்சோலை

# லண்டன் முருகன்

### கவிஞர் ஞானமணியம்

கண்டவரின் உள்ளம் தன்னைக்
காந்தமெனக் கவரும் கந்தன்
கதிரைமலை இறைவன் நாமம் கூறாய் நெஞ்சே।

லண்டனருள் முருகன் வேலன்
நாடிவரும் பிணிகள் யாவும்
நன்றுபொடி செய்வான் நின்றே நீறாய் நெஞ்சே।

வீண்டலமா அமரர் தம்மை
வீடுவித்தான் செந்தூர் வீரன்
வென்றெமது பகையும் காப்பான் வீறாய் நெஞ்சே।

அண்டமெலாம் தமிழாய் வாழும்
ஆறுமுகன் அழகன் சீமை
ஆங்கிலமண் ஈங்கும் ஆள்வான் பேறாய் நெஞ்சே।

குண்டுமலை ஏறிக் குமரன்
கோடியடி யார்கள் நாளும்
கூறுபடை அன்றே கொண்டான் ஆறாய் நெஞ்சே।

வண்டுமலர் சூடும் கொன்றை
வள்ளிதெய்வ யானை பங்கன்
வையகத்தி லின்றே கொண்டான் நூறாய் நெஞ்சே।

தெண்டனிடும் திரு வீழாக்கள்
தேரோடும் பெரு வீழாக்கள்
திகழும் "கிழக்காம்" ஊரில் வேறாய் நெஞ்சே।

கொண்டவினை தீர்க்கும் வள்ளல்
கொடுத்தாளும் அருளின் வெள்ளம்
குறையாது பாயும் கங்கை வாறாய் நெஞ்சே।



# கனியாய்,கவியாய், காலமெல்லாம் காலமெல்லாம் கலசமிதழ் மலர்க!

கடல் கடந்து சென்றாலும் நம்மினத்தவர்
திடல் மனம் கொண்டவராய் அங்கு
மடல் ஒன்று மலர வைக்கின்றனர் மகிழ்வுடன்

கடல் போல் பரவட்டும் அக்கலசமெனுமிதழ்!

காலமெல்லாம் களிறுகொண்டு கலசமிதழ்
தேசமெல்லாம் தேன் வண்டாய்த் திரிந்துசென்று
வீடெல்லாம் விளக்கொளிபோல் விளங்கி நின்று
நாடெல்லாம் செல்லவேண்டும் நானிலமும் போற்றவேண்டும்!

எம் மினத்தவர் செய்யும் இனிய தொண்டிது
நம் மினத்தவரின் நற்பெயர் தனைக் கூறுமென்றும்
தம் மினம் தமிழ் என தரணியிலே தழைக்கவைக்கும்
நம் மினக் கலச ஆசிரியர்கட்கு ஆசிகள் பல !

இலண்டன் மாநகரிலிருந்து வரும் கலசமிதழில்
கொண்டன் பண்ணிக் குறை கூற எதுவுமில்லை
கனியாய்க் கவியாய் காலமெல்லாம் கலசமிதழ் மலர
இனிதாய்க் கவிபாடுகிறேன் இலங்கை தமிழ் மக்கள் சார்பில்!



துன்னையூர் ராம் தேவலோகேஸ்வரசர்மா
(கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் கோவில்,
கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்)

# சுவிற்சலாந்தில் நடைபெற்ற உலக இந்து தமிழ் கலாச்சார மகாநாடு

வேற்றுக் கலாச்சாரத்தின் பின்னணியில் தமிழ் மொழிக்கு அந்நியமான சூழ்நிலையில் வாழவேண்டிய அவல நிலைக்கு உள்ளாகி தம் மொழியையும் தமது சமயத்தையும் மெல்ல மெல்ல மறந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு எழுச்சியும் விழிப்பும் ஏற்படுத்துவதற்கான மகாநாடு ஒன்று ஜுலை மாதம் 24ஆம் 25ஆம் தேதிகளில் சுவிற்சலாந்தில் சூரிச் என்ற பெருநகரில் கோலாகலமாக நடைபெற்றது. சுவிற்சலாந்தின் இருபத்தாறு மாகாணங்களில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழ் மக்களால் அமைக்கப்பெற்று சூரிச்சில் இயங்கிவரும் சுவிஸ் இந்து மாமன்றம் மேற்படி மகாநாட்டினை ஏற்பாடு செய்திருந்தது. ஐரோப்பாவில் வாழும் ஈழத்தமிழ் மக்கள் இதுவரை கண்டிராத அளவுக்குப் பிரமாண்டமாக நரடைபெற்ற மேற்படி மகாநாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுவிஸ் வாழ் தமிழ் மக்களும் சுவிற்சலாந்து மக்களும் கலந்து சிறப்பித்தார்கள்.




இந்துசமயத்தின் சிறப்பியல்புகளையும் தமிழ் மொழியின் செழுமையையும் தமிழ்க் கலாச்சாரத்தின் பழமையையும் தமிழ் மக்களுக்கு எடுத்தோதுவதின் மூலம் தடுமாறிப் பாதை மாற முயல்கின்ற தமிழ் மக்களை நல்வழிப்படுத்தலாம் என்பதை உணர்ந்து சுவிஸ் வாழ் தமிழர் தென்னிந்தியா ஜேர்மனி,பிரான்ஸ் இலண்டன் ஆகிய இடங்களிலிருந்து அருளாளர்களையும் அறவாளர்களையும் கலைஞர்களையும் கவிஞர்களையும் பேச்சாளர்களையும் அழைத்திருந்தார்கள்.

இரண்டு நாட்களாக நடைபெற்ற இந்துக்கலாச்சார மகாநாட்டில் மதமாற்றம் என்ற விடயம் பற்றிப் பெரும் அளவிலான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. கருத்தரங்கம், கலையரங்கம்,வழக்காடுமன்றம், என்ற சுவையான இலக்கிய வடிவங்களின் மூலம் "மதமாற்றம் " என்ற விடயம் வெகுநாசூக்காக அலசியாராயப்பட்டது. மதமாற்றம் என்ற நோய் எப்படி எப்படி எல்லாம் வேரோடி வருகின்றது , மதமாற்றம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன , அகதிகளாக வந்திருக்கும் தமிழர்கள் எப்படி மதமாற்றப்படுகின்றார்கள் , மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்குப் மார்க்கம் என்ன என்ற விடயங்கள் அலசியாராயப்பட்டன.

இந்தியாவில் இயங்கிவரும் விவேகானந்த கேந்திரத்தைச் சேர்ந்த R.B.V.S மணியம், சிரவை அதீனத்தைச் சேர்ந்த சுந்தர சுவாமிகள் பேரூர் ஆதீனத்தின் தலைவரான சாந்தலிங்க ராம அடிகள் ஆகியோரின் ஆன்மீகச் சொற்பொழிவுகளும், இலண்டனைச் சேர்ந்த புலவர் சிவநாதன் சைவ முன்னேற்ற சங்கத்தைச் சேர்ந்த வீ.ஆர். இராமநாதன், வழக்கறிஞர் செ. சிறீஸ்கந்தராசா, ஜேர்மனியைச் சேர்ந்த தமிழ்க்குமரன்,லோகநாதன், பாரீசிலிருந்து வருகை தந்திருந்த தமிழ்ப் பேராசிரியர் சக்திப்புயல் அவர்களின் சிந்தனைப் பேச்சுக்களும் காரசாரமாக நடைபெற்ற வழக்காடு மன்ற நிகழ்ச்சிகளும் கவியரங்க காட்சிகளும் மகாநாட்டுக்கு வலுவும் பொலிவும் வழங்கி மாநாட்டைச் செகயோதி ஆக்கி வந்திருந்தோரை சிந்தனைச் சோலைக்கு எடுத்துச் சென்றன.

தமிழ் மக்களின் சிந்தனை ஓடையில் புதுநீர் பாச்சுவதற்கென நடாத்தப்பட்ட மேற்படி மகாநாடு கண்ணுக்கும் காதுக்கும் விருந்து வழங்கும் வண்ணம் கலைநிகழ்ச்சிகளையும் கதாப்பிரசங்கங்களையும் ஒழுங்கு செய்திருந்தது.

தமிழ் கூறும் நல்லுலகம் எல்லாவற்றுக்கும் நன்கு அறிமுகமான அரிதாஸ் சுவாமி அவர்கள் மாற்றுக்குறையாத தமது "இசையாலும் நடிப்பாலும் " சபையோர்க்கு ஆனந்த விருந்து வழங்கி மகிழ்வித்தார்.

வயலினிசை மழைபொழிய எனத் தமிழ் நாட்டி லிருந்து வருகைதந்திருந்த குன்னக் குடி வைத்தியநாதன் குழுவினர் மூன்று மணி நேரம் தொடர்ச்சியாக இசைமழை பொழிந்து நாதத்தின் மூலம் வந்திருந்தோரை இறையுலகுக்கு இட்டுச் சென்றனர்.

இலண்டனிலிருந்து சுவிற்சலாந்திற்கு அழைக்கப்ப ட்டிருந்த மாதினி சிறீஸ்கந்தராசா அவர்களின் வாய்ப்பாட்டு இசை நிகழ்ச்சி கேட்டோரை எல்லாம் பரவசப்படுத்தியது. மகாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளின் மைய நிகழ்ச்சியாக சர்மினி ராஜகோபால் அவர்களின் நாட்டிய நிகழ்ச்சி இடம்பெற்றது.

**செ.திருமுருகன்**

அவரின் தாயாரான திருமதி ராகினி ராஜகோபால் நட்டுவாங்கம் செய்ய மாதினி சிறிஸ்கந்தராசா அவர்கள் பாட சர்மினி ஆடிய நிகழ்ச்சியைக் கண்டுகழித்த

பார்வையாளர்களும் , குன்னக்குடி வைத்தியநாதன் போன்ற ஞானியர்களும் , இலங்கை மக்களின் இசையாற்றல்களையும் பரதநாட்டியத்திறமையையும் போற்றிப்பாராட்டினார்கள்.

இலண்டனிலிருந்து சென்றிருந்த கலைஞர்களான முத்து சிவராசா, பெங்கலூர் பிரகாஷ் திருவாரூர் கோதண்டபாணி, ஆகியோர் அழகுக்கு அழகு சேர்த்துக் கலை நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தார்கள்.

இவ்வளவு பிரமாண்டமான ஒரு பெருவிழாவைப் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் எடுத்துத் தமிழ்மக்களுக்கு பெருமை சேர்த்திருக்கின்றார்கள். பிறநாட்டார் போற்ற வாழ்கின்றார்கள். இதற்குக் காரணம் தமிழர்கள் எங்கு சென்றாலும் என்ன நேர்ந்தாலும் தெய்வம் மறவார் செய்வினை பிழையார் டின்பதைத் தவிர வேறு யாதாக இருக்கக்கூடும்.

இம்மாபெருவிழாவின் ஆதார சுருதி திரு கணபதிப்பிள்ளை அவர்கள், லயம் திரு ராம்குமார் அவர்களும், ஏனையகுழு அங்கத்தவர்களும் உலகில் வாழும் அத்தனை கோடி தமிழ் மக்களின் பாராட்டுக்கும் உரியவர்கள் இவர்களே.

---

வரப்பெற்றோம்

## சைவஉலகம்

**காலாண்டு செய்தி மலர்**

**மெய்கண்டார் ஆதீன வெளியீடு**

இலண்டன் மெய்கண்டார் ஆதீனத்தின் காலாண்டுச் செய்தி வெளியீடான சைவ உலகம் 3 சஞ்சிகை கிடைக்கப் பெற்றது. இருமொழி வெளியீடான இச்செய்தி மலர் உலக சைவப் பேரவைக்காக மெய்கண்டார் அதீனத்தால் வெளியிடப்பட்டுள்ளது.தரமான ஆக்கங்களும் முக்கியமான செய்திகளும் கொண்டு வெளிவந்திருக்கும் இச்சஞ்சிகை மக்களின் இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்வதாக உள்ளது மகிழ்ச்சிக்குரியதே! இது மேன்மேலும் வளர்ச்சியடைந்து சைவ உலகத்துக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ வேண்டும் என்பது எமது தணியாத ஆசை.

## நாழிகை

சர்வதேச செய்திச் சஞ்சிகை

ஆசிரியர் : எஸ். மகாலிங்கசிவம்

அழகான அமைப்புடன் வெளிவந்துள்ள இச் சஞ்சிகை பலதரப்பட்ட வாசகர்களையும் திருப்தி பண்ணும் வகையில் வெளிவந்துள்ளது. வாணப் படங்கள் , உலகச் செய்தி அலசல்கள், சினிமாச் செய்திகள் , மற்றும் கலையுலகச் செய்திகளும் செவ்விகளும் புத்தகத்தின் தரத்தை எண்ணி மூக்கில் விரல் வைக்க வைக்கிறது.மிகுந்த பொருட்செலவில் செய்யப் பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.இது தொடர்ந்து தமிழ்மக்கள் மத்தியில் தவழ்ந்து பெருமை பெறுவதற்கு வாசகர்கள் கை கொடுக்க வேண்டுமென்று கலசம் சார்பாக வேண்டிக்கோள்கிறோம்.

## சைவ ஸ்தாபனங்களின்முகவரிகள்

### ஸ்ரீ கணபதி ஆலயம்

123-125,Effra Road, Wimbledon,London
SW 19 8PU
T.P: 081- 542 7482

### அருள்மிகு உயர்வாசற்குன்று திருமுருகன் கோயில்

200A, Archway Road,Highgate Hill, London
**N6 5BA**
**T.P : 081 348 9835**

### லண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

78, Church Road,Manor Park,London
E12 6AF
T.P: 081- 478 8433

### ஸ்ரீ மகாலட்சுமி ஆலயம்

**272 High Street North,Manor Park,London,E126SA**

### இலண்டன்மெய்கண்டார் ஆதீன அறக்கட்டளை

P.O Box 428.London E 17 5JE .UK.

---

### சைவமதமே அறிவு மதம்!

சிவபெருமானின் திருக்கூத்தை குறிக்கும் நடராஜ விக்கிரகத்தின் பெருமையை யாரால் அளவிட்டுச் சொல்ல முடியும். தென்னிந்தியாவில் ஓர் அதி ஆச்சரியமான மனிதர் தோன்றினார். இந்தியரின் வாழ்க்கையில் மன்னரும் மன்னர் மன்னரும் செய்வதைவிட அதி முக்கியமான காரியங்களை இவர் செய்ய வேண்டுமென விதி வகுத்திருந்தது......


இளம்பிராயத்தினரான இவருடைய பெயர் சங்கராச்சாரியர் என்பது. எட்டாவது நூற்றாண்டின் இறுதியில் இவர் பிறந்திருக்கலாம். இவருடைய மேதா விலாசம் நாவினால் பேசவொண்ணாதது. இவர் இந்து மதத்திற்கு புத்துயிர் அளிக்கும் நன்முயற்சியில் ஈடுபட்டார். சிவபெருமானை வணங்கும் சைவ சமயத்தை இவர் பரப்ப ஆரம்பித்தார். இவர் பிரசாரம் செய்த சைவத்தை பகுத்தறிவுக்கு ஒத்த இந்து மதம் என்று சொல்லலாம்.

சங்கரரின் வாழ்க்கையிலிருந்து நாம் உண்மையையும் தெரிந்து கொள்கின்றோம். அது தான் இந்தியா கலைத்துறையில் அடைந்திருந்த ஒற்றுமையாகும். பண்டைய சரித்திரம் முழுவதிலும் இது ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். பூமியின் இயற்கையமைப்பில் இந்தியா ஏறக்குறைய ஒரு தனிப்பட்ட பிராந்தியமாக இருக்கிறது. அரசியலில் அது அநேகமாக பிளவுபட்டே இருந்து வந்திருக்கின்றது. சில சமயங்களில் அது ஏறக்குறைய ஒரே மத்திய அரசாட்சியின் கீழ் இருந்து வந்திருக்கின்றது. ஆனால் ஆதியிலிருந்தே இந்தியா கலைத்துறையில் ஒன்று தான்.

# மௌனம்

**இ. சி. தில்லைநாதர் மூர்த்தி (J.P)**

நிசப்தம், அமைதி, வாயடை, பேசாமல் இரு, கூச்சலை அடக்கு, ஓசையில்லாத இடம், தனிமை, விடுபட்ட நிலை என்று கூறலாம். இப்படியான நிலையில் எமது அவையவங்கள் எல்லா ஆசாபாசங்களையும் மறந்து செயலற்ற நிலையில் இருப்பது, மனம் ஆரவாரப்படாமல் உள்ளடங்கி உறையும் பொழுதாகும்.



எல்லாப் பொருட்களையும் அடையாளம் காணக்கூடியதாய் இருந்தும் அவற்றின் அடிப்படையை தெரிந்தும் மூலப்பொருளைக் காணாதமையே உனது தவறாகும். உருவாவதற்கு எது மூலப்பொருளாகின்றதோ அதுவே அமைதி, நிசப்தம் ஆகியவற்றிற்கு வழிகோலாகும். அறிஞன் தனது சந்தேகத்தை நீக்கிவிடுகிறான் சந்தேகம் தான் அடிப்படையாக குழப்பத்தை உண்டாக்கும் நிலையை ஆரவாரப்படுத்தி அநாவசியமாக சத்தத்தைப் பிறப்பிக்கின்றது. உன்னால் அமைதியை நிதானப்படுத்த முடியுமானால் அதுவே தியானம். தியானத்திற்கு அடுத்தபடி விடுபட்ட நிலையாகும். கடவுளுடன் ஒன்றாகக் கலப்பதாகும். இதற்கு மேல் கொண்டு அறிவதற்கோ நிலையை நிரூபிப்பதற்கோ இடமில்லையாகும். குறிக்கோளில்லாமல் அமைதியைக் காண்பது இலக்காகமாட்டாது. அமைதிக்கும் விடுபட்ட நிலைக்கும் ஒரு கணப்பொழுது கூட இடவெளியாக இருப்பதில்லை. விடுபட்ட நிலையே ஆழ்ந்த அறிவினால் தற்சோதனைக்கு ஆட்படுத்துவதாகும். தன்னைத் தானே நாசம் செய்வதாகும். உருவாகிக்கொண்டு போகும் அமைதிக்கு எந்தவித ஆவலுமிருக்கமாட்டாது. பிளவு இல்லாமல் நீடித்துவிடும் எந்தவிதமான எச்சரிக்கையுமின்றி களங்கம் அற்ற தன் நிலையை அறிந்துவிட முடியும் உண்மையான அமைதி முத்தி அல்லது நிர்வாணம் எனப்படும். முத்தி அடையும்போது சங்கற்பம், நிவிர்த்தியம், சந்தேகம், அலட்சியம், ஐயப்பாடு எல்லாம் அழிந்துவிடும். அமைதியே உன்னுடைய அடிப்படைச் சுபாவம் ஆகும். இப்படியான இடத்து தியானம் இயற்கையாகவே உருவெடுத்துவிடுகின்றது. பக்குவப்பட்ட மனம் தியானத்தை மேற்கொண்டதும் ஞானசக்தியினால் செய்வினைகளைக் கணக்கிடக்கூடிய அளவுக்கு வந்துவிடுகின்றது. இந்த நிலை ஆரம்பம் என்று கூறப்படும். ஆரம்பம் தூய்மையானதாகி எதிரிடையில்லாமல் பிரம்மமாய்த் தோற்றும். ஆத்மா ஏற்கப்படும் கட்டமாகும். ஒவ்வொரு ஆத்மாவும் மூலசக்தியால் தெளிவான ஞானம் பெற்று, அறிவின் வளர்ச்சிக்கு இருப்பிடமாகின்றது. இப்படி சிருஷ்டிக்கப்பட்டது காலப்போக்கில் கனிவு பெற்று தெளிவுபட்ட நிலையை நன்கு அறிந்து உடலின் பிரக்ஞையை அறிந்துகொள்வர். ஏடுகளை வாசித்து ஒருபோதும் தண்டனைகளை நீக்கிக்கொள்ள முடியாது. தனித்த நிலையில் எண்ணமற்று இருக்கும் போது தண்டனைகள் தாமாகவே வந்து நீங்கிக் கொள்கின்றன. பயம், துக்கம், ஆகியவற்றில் இருந்து விலக்குடையவனாகின்றாய். இப்படிப்பட்ட நிலையில் தைரியம் தாமாகவே ஏற்படும். இங்கு மௌனம் நீடிக்கும். மௌனம் சக்தி வாய்ந்தது. சுறுசுறுப்பானது. தொனிக்கின்றதாய் , ஆத்மசாகரப்பட்டதாய், பல பெயர்களைக் கொண்டதாய், தோன்றி சலனப்பட்டு, கனிவுபட்டு பின்பும் சூனியமாகிவிடுகின்றது. வைத்தியக் கோட்பாட்டிற்கு இணங்க இடையறாத ஆக்கத்திற்கும், அழிவுக்கும் அச்சாணியாக அணுக்களின் அசைவு பெற்று இயங்குவதே இயற்கையின் குறிக்கோளாகும். ஆகவே மௌனம் சும்மா இருந்துவிடவில்லை. ஏதோ கட்டங்களில் திரும்பவும், திரும்பவும் அசைவு பெறுவதாலே தான் மௌனம் கலைவதற்கு காரணமாகின்றது. பிறப்புக்கும் இடம் கொடுத்துவிடுகின்றது. பிறப்பு கீர்த்தி, புகழுக்கு உறைவிடமாகிவிடுகின்றது. ஞானசக்தி இல்லாமல் போலி வாழ்வு மலர்கின்றது. ஞான உபதேசம் மறையும். சாகரவேதனையால் அல்லற்படுபவன் ஆத்மசாந்திக்கு குருதேவரிடம் போய் காலில் விழுந்து தன்னைக் காப்பாற்றும்படி வேண்டினான். அதற்கு குருவானவர் உன்னை யார் இந்த சாகரத்தில் ஈடுபடச் சொன்னார் என்று கேட்டார். பதில் கூற முடியவில்லை. நீ எப்படி இந்த சாகரத்தில் ஈடுபட்டுக் கொண்டாய் என்று கேட்டார். இதற்கும் பதிலில்லை. உனது புலன் தான் தீண்டியதாய்க் கருதினால் உனது புலனை எடுத்துக் கொண்டு வருவாயாக என்று கூறி அனுப்பினார். அடுத்தநாள் குருவிடம் சென்று புலனை எடுக்க முடியவில்லை என்று அலறினான். அல றியவனைப் பார்த்து உனது குறிக்கோளுக்கு நீயே மருந்து கண்டு கொண்டாய் . எனது கையில் ஒன்றுமில்லை. ஒன்றுமில்லாத நிலைதான் மௌனம். இதுவே மூலாதாரம்.

## செயல்

சீவி முடிக்கப் பெறாத தலையும் , செயலுக்கு வராத சிந்தனையும், கடவுள் எழுந்தருளாத திருக்கோலம், மகப் பேறில்லாத மனை வாழ்க்கையும், தொண்டின் துன்பம் தெரியாத துறவு வாழ்க்கையும், அது போல தொடங்கிய செயலைத் தொடர்ந்து செய்து முடிக்காத வாழ்க்கை ! வாழ்க்கையன்று. அந்த வாழ்க்கையை இன்றைய உலகமும் மதிக்காது. நாளைய உலகமும் பாராட்டாது. செயல் செய்திடுக . செயல் முடியும் வரை செய்திடுக! அதுவே இன்ப வாழ்க்கை!

– தவத்திரு குன்றக்குடி அடிகளார் –

# குடமுழுக்குக் கண்ட திருக்கோணேஸ்வரம்



ஈழத் திருநாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்கள் இரண்டு. ஒன்று திருக்கோணேஸ்வரம், மற்றையது திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வர ஆலயம் இலங்கையில் கிழக்குக் கரையிலே உலகப் பிரசித்தி பெற்ற இரண்டாவது பெரிய



இயற்கைத் துறைமுகமாகும். திருகோணமலைத் துறைமுகம் அமைவதற்கு சாதகமாக உள்ள மலைகளொன்றின் உச்சியில் திருக்கோணேஸ்வரம் இருக்கின்றது. மூன்று மலைகளால் சூழப்பட்டு முக்கோணவடிவிலிருப்பதனால் திருகோணமலை என இப்பிரதேசம் கூறப்படுகின்றது. இத்திவ்ய கேந்திரத்தினை தெட்சணகைலாயம் என்றும் கூறுவர். வடக்கே கொடு முடியில் கைலயங்கிரியில் கைலாசநாதன் எழுந்தருளியிருப்பது போல், திரு கோணமலையில் கோணேஸ்வரப்பெருமான் எழுந்தருளியிருந்து மாதுமையாள் சமேதராக அருள் பாலிக்கின்றார். பூகோள அமைப்பில் இந்த இரண்டு தலங்களும் ஒரே அட்சரேகையில் அமைந்திருப்பதையும் , இவை இரண்டிற்கும் நடுவே தில்லைத் திருத்தலம் அமைந்திருப்பதையும் திருமூல நாயனார் திருமந்திரத்தில் குறிப்பிடுவதை ஈண்டு நோக்கத்தக்கது.

## புராணவரலாறு —

ஆதிகாலத்திலே ஆதிசேடனுக்கும், வாயுபகவானுக்கும் ஏற்பட்ட பலப்பரீட்சையில் வாயுபகவான் மேரு பர்வதத்தில் இருந்து மூன்று குன்றுகளை பெயர்த்தெடுத்து வீசினார் எனவும் அவை காளத்தி, திருச்சி, திருகோணமலையிலே விழுந்தனவென்றும், அவ்வாறு விழுந்த குன்றுகளில் பிரதான சிவஸ்தலங்கள் தோன்றின என்றும் பௌராணிக வரலாறு கூறுகின்றது. இவ்வாலயத்தின் தொன்மைப் பழங்கதைகளில் பலவாறாகப் பேசப்பட்டுள்ளது. இராமாயண காலத்தே இலங்கையை ஆண்ட இராமேஸ்வரன் கோணேஸ்வரப் பெருமானைப் பூஜித்த வரலாறு சொல்லப்படுகின்றது. இராவணேஸ்வரன் தாயார் தினசரி கோணேஸ்வரப் பெருமானைத் தரிசித்து வந்ததாகவும் ஒரு நாள் அவரின் சுகவீனத்தால் போக முடியாமற் போகவே இராவணன் கோணேஸ்வரரை தாயாரின் அருகே கொணர முற்பட்டு மலையை வெட்டினான் என்றும் இடையே மகாவிஷ்ணுவால் திசைதிருப்பப்பட்டு இடையில் நிறுத்தினான் என்றும் புராண வரலாறு கூறுகின்றது. இன்னும் மலையில் உள்ள மிக அகன்று விரிந்த பிளவு 'இராவணன் வெட்டு' என அழைக்கப்படுகின்றது.மகாவிஷ்ணுவால் திசைதிருப்பப்பட்ட இராவணன் தன் தாயாருக்கு ஈமைக்கிரிகைகள் செய்ய தன் வாளால் ஏழு இடங்களில் குத்தியதாகவும் அவை இன்றும் ஏழு வெந்நீரூற்றுக்களாக இருப்பதாகவும் புராண வரலாறு கூறுகின்றது. இவ்வெந்நீரூற்றுக்கள் திருகோணமலையில் இருந்து சுமார் 4 மைல் தொலைவில் உள்ள கன்னியா என்றும் இடத்தில் இன்றும் காணலாம்.

மிகத் தொன்மையான கோணேசர் ஆலயத்தின் வரலாறு புராண இதிகாச காலத்தோடு பின்னிபிருப்பதால் தோற்றம் பற்றி வரையறை செய்யப்படவில்லை. ஆயினும் இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப் பெற்று மெருகோடு மிளிர்ந்த காலம் குளக்கோட்டு மகாராசா காலமாகும். இது கலியுக வருடம் 512 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

குளக்கோட்டன் காலத்தில் இவ்வாலயம் மகோன்னத நிலையில் இருந்திருக்கின்றது. இவ்வாலய பராமரிப்பிற்காக

து.தவசிலிங்கம்
திருகோணமலை,இலங்கை

அவ்வரசன் கந்தளாய் எல்லைக் குளங்களை வெட்டி வயல் வரம்புகளை ஏற்படுத்தி குடியேற்றங்களையும் உள்ளடக்கியிருந்தான். பிற்காலத்தில் 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இந்தியாவில் இருந்தவாறே "கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே" எனப் பாடியதன் மூலம் கோணேசர் ஆலயம் அதன் மகோன்னத காலத்தே சுற்றிலும் கோவில்களாலும், சுனைகளாலும் சூழ்ந்திருந்தது புரியற்பாலதாகும். வடக்கே திரியாய் என்று சிற்றூரும், தெற்கே மல்லிகைத்தீவு என்னும் சிற்றூரும் கோணேசர் ஆலயத் தொடர்பால் காரணப் பெயர் பெற்று வழக்கிலுள்ளது. கோவிலுக்கான திரிகள் திரியாய் கிராமத்தில் இருந்தும், பூஜைக்கான மல்லிகை மலர்கள் மல்லிகைத் தீவிலிருந்தும் வந்ததாக வரலாறு உள்ளது. மற்றும் கோவில்களால் கோணேசப் பெருமாள் ஆலயம் சூழ்ந்திருக்க செறிவால் சனீஸ்வரனுக்காக தனி ஆலயமும் உண்டாகியிருந்தது. இக்கோவிற் சிறப்பை எடுத்தியம்பலாயிற்று. ஏனெனில் பல ஆலயங்கள் ஒரு சூழலில்

இருந்தால் மட்டுமே சனீஸ்வரப் பெருமானுக்குத் தனியாலயம் வைக்கலாம் என்பது ஐதீகமரபு.

இப்படி மகோன்னதமாய் இருந்த கோணேசர் ஆலயம் 1624 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் இடித்து மட்ட மாக்கப்பட்டது. இடித்த இடிபாடுகளில் இருந்த கல்வெட்டுக்கள் பின்னால் வந்த ஒல்லாந்தர் கோட்டையினை கட்டும் போது வாசலிலே வைத்துக் கட்டப்பட்டு இன்னும் நிலைத்து இருக்கின்றது. கோட்டை வாசலின் இடது கரையில் பாண்டிய மன்னனின் மீன் சின்னமும், வலது கரையில் பின்வரும் வசனங்களைத் தாங்கிய கல்வெட்டும் காணப்படுகின்றது.

**"முன்னைக் குளக்கோட்டன் மூட்டு திருப்பணியை**
**பின்னே பறங்கி பிடிக்கவே-மன்னா கேள்**
**பூனைக்கண் செங்கண் புகைக்கண்**
**போனபின் மானே மடுமாய் விடும்"**

இக்கல்வெட்டுவாசகம் இன்று வரை சரியாகவே நடை



பெற்றுள்ளது. வாசகத்தின் படியே போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட கோவில் பின் ஒல்லாந்தர் ஆங்கிலேயர் என வெளிநாட்டவரால் சிதைக்கப்பட்டு ஈற்றில் பழைய மகோன்னதம் பெறும் என்பது செய்யுள். 1624 ஆம் ஆண்டில் புகழ் பெற்ற கேணேசர் கோவிலை இடித்தழித்த டிகொன்ஸ்டன் டீசா என்ற போர்த்துக்கீசிய தளபதி இக்கல்வெட்டின் பிரதிகளை போர்த்துக்கல் மன்னனுக்கு அனுப்பி வைத்ததாகவும் அவை இப்போதும் அஜீடா நூல் நிலைய சுவடியில் உள்ளதாகவும் தெரிகின்றது.

கோவில் அழிக்கப்பட்ட போதிலும் கோணேசப் பெருமானை வழிபட்ட பக்தர்கள் கோவிலின் அருகேமிருந்த கல்லால் மர நிழலில் பூஜைகள் செய்து வழிபட்டு வந்திருக்கின்றனர். பிற்பாடு சுமார் 350 ஆண்டுகளின் பின்பு திருகோணமலை நகர வட கடற்கரை ஓரமாக ஒரு கிணறு தோண்டும் போது அருமையான கலை நுணுக்கம் கொண்ட கோணேசர் ,மாதுமையம்மாள்,சந்திரசேகரர், வீரசக்தி ,அன்னம் விக்கிரகங்கள் மீண்டும் கண்டெடுக்கப்பட்டன.

திருக்கோணமலை வாழ் சைவ அடியார்கள் ஒன்றிணைந்த செயலால் 1950 ஆம் ஆண்டில் மீண்டும் கோணேசப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜைகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. பிற்பாடு சைவ அடியார்கள் அயராது செயற்பட்டதனால் 1963ஆம் ஆண்டு கோவில் புனருத்தாரனம் செய்யப்பட்டு சுமார் 340 ஆண்டுகளின் பின் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இப்போதும் கல்லால் மர நிழலில் மலைப்பூஜை நடைபெற்றதன் பின்னரே கோவில் உட்பிரகாரங்களில் பூஜைகள் நடைபெறுவது வழக்கம். இடையே மைக் வில்சன் , ஆர்தர் கிளார்க் போன்ற ஆய்வாளர்கள் கடலின் அடியில் ஆராய்ச்சிகள் பல செய்து இன்னும் கோவிலின் பல இடிபாடுகள் கடலின் அடியில் இருப்பதாகக் கூறிய தோடல்லாமல் பழைய கோவிலில் இருப்பதாகக் கூறப்படும் சிவலிங்கம் ஒன்றையும் மீட்டுத் தந்தார்கள். அச்சிவலிங்கம் சற்றே ஊனமுற்றிருந்தால் கோவிலின் புறத்தே வைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றோடு ஒரு கிணறு தோண்டும் போது கிடைத்த மகாலட்சுமி, மற்றும் மகாவிஷ்ணு, விக்கிரகங்கள் கோணேசர் கோவிலுள் இருந்த பரிவார மூர்த்திகள் பெருமையினை பறைசாற்றுகின்றன. கடலில் கண்டு மீட்டெடுக்கப்பட்ட கற்றூண் ஒன்று மலை உச்சியில் வைக்கப்பட்டு திருக்கார்த்திகையின்போது தீபம் ஏற்ற பயன்படு த்தப்படுகின்றது.

ஆகம விதிகளின்படி பதினொரு ஆண்டிற்கொரு முறை கும்பாபிஷேகம் நடைபெறவில்லை என்றாலும் 1981ஆம் ஆண்டு இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆயினும் நன்மையும் ,தீமையும் மாறி மாறி வருமாதலால் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக 1985ஆம் ஆண்டளவில் கோவில் ஸ்தம்பிதமடைந்தது. பிற்பாடு ஏற்பட்ட சேதங்களை நிவர்த்தி செய்து 1987ஆம் ஆண்டில் இன்னும் ஒரு கும்பாபிஷேகம் நடந்த பொழுதிலும், 1990ஆம் ஆண்டு கலவரத்தில் கோவில் மீண்டும் பூட்டப்பட்டது. இப்போ திருகோணமலை வாழ் சைவ மக்களும், அரசாங்கமும், அரச ஊழியர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டதால் மாசி மாதம் 11ஆம் திகதி மூன்றாவது குடமுழுக்கு சிறப்பே நடந்தேறியது.

## தீர்த்தம்

**கோ**ணேசப் பெருமான் தீர்த்தம் பாபநாச சுனையாகும்.

இஃதும் போர்த்துக்கீசியரால் நாசமாக்கப்பட்டது. இருப்பினும் சுனையின் அருமருங்கில் இருந்த சுனையோடு கூடிய கிணறுகள் மூடக்கட்டுப்பட்டு இருந்தமையினால் இன்று சுவாமி தீர்த்தமாட பயன்பட்டு வருகின்றது. இக்கோவிலின் சிறப்பு பாபநாச சுனை நீர் இறைக்கும் இயந்திரத்தின் உதவியினால் மேலே எடுத்து பக்தர்களுக்கு வீசப்படுவது பார்க்கவே பல கண்கள் வேண்டும் காட்சியாகும்.

கோணேஸ்வரப் பெருமானின் பெருமைகளையும் சிற ப்புக்களையும் பின்வரும் நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

1.தெட்ஷண கைலாய புராணம்
2.திருக்கோணேஸ்வரப் புராணம்
3.கோணேஸ்வரர் கல்வெட்டு
4.திருக்கோணேஸ்வரர் வைபவம்
5.திருஞானசம்பந்தர் தேவாரப்பதிகம்
6.அப்பர்,சுந்தரர் தேவாரப்பதிகங்கள்
7.திருப்புகழ்
8திருக்கோணேஸ்வரம்
9புராதன யாழ்ப்பாண சரித்திரம்

10.திருக்கோணமலை அந்தாதி முதலியன.

இன்று ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது காசியில் கங்காதேவியால் இயற்கையாக உருவாக்கப்பட்ட பாணலிங்கம் என்பதும் இத்தலத்தின் சிறப்புக்களில் ஒன்று. சைவ அடியார்கள் மட்டுமன்றி சாதி மத பேதமின்றி யாவரும் வந்து வழிபட்டு இஸ்ட சித்திகளை பெறும் புராதண கோணேஸ்வரம் அருணகிரிநாதர் கூறியதுபோல் "நினைத்த காரியம் அனுகூலமே தரும்" பெருமானாகிய மாதுமையம்பாள் சமேத கோணநாதப் பெருமான் சிறப்புற்று விளங்கும் திருத்தலம்.

## கலசம் 1 பற்றிச் சில குறிப்புகள்

அன்புள்ள ஆசிரியருக்கு,
கலசம் நல்ல அமைப்பு. பல்வேறு வயதினருக்கும், பல்வேறு தரத்தினருக்கும் பொருத்தமான அம்சங்களில் விடயங்கள் அடங்கியுள்ளன.நமஸ்காரம் செய்யும் முறை லண்டன் மட்டும் கண்டவர்களுக்கு இன்றியமையாத செய்தி.சித்தாந்தச் சிந்தனைகள் சைவசமயம் ஓரளவு தெரிந்தவர்களுக்கு நல்விருந்து. அப்படியே பாரதி, வள்ளுவர் தொடர்பான கட்டுரைகளும். ஐயங்களைத் தீர்க்க முயலும்போது பதில்கள் எங்கிருந்து தொகுக்கப்பட்டன என்பதையும் தெரிவித்தல் பயனு டையது.இளைய நெஞ்சங்களை நன்றாக ஊக்குவிக்க வேண்டும்.ஒரு சில குறைகள்:
திரவியாங்கம்-திரயாங்கம் என்றிருத்தல் வேண்டும்
"மற்றதற்குப் பிள்ளையார் " என்ற பாடல் தேவாரம் அல்ல-பெரியபுராணம்
தமிழ் எழுத்துக்கள் வல்லினம்,மெல்லினம்,இடை யினம் எனபன கடைமினம் அல்ல.
உணரும் அசத்தெனின்-உணருரு அசத்தெனின்
மு.சிவராசா (யாழ்ப்பாணம்)

அன்புள்ள ஆசிரியருக்கு,
கலசத்தின் அமைப்பு நன்றாக உள்ளது. ஆயினும் அதன் உள்ளடக்கங்களில் ஆசிரியர்கள் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும். மேலோட்டமான ஆக்கங்களைவிட மிகஆழமாக ஆத்மீக விடயங்களை உள்ளடக்கிய ஆக்கங்களை உரியோரிடமிருந்து பெற்றுப் பிரசுரித்தல் வேண்'டும்.

க.முருகேசு (கொழும்பு)
(அபிப்பிராயங்களுக்கு நன்றி எதிர்வரும் கலச இதழ்களில் தாங்கள் கூறிய குறைகளை நிவர்த்தி செய்ய எம்மாலானவரை முயற்சிக்கிறோம்.
இணை ஆசிரியர்கள்

## நூறாண்டு கண்ட ஞானச் செல்வரின் மோனத்தவம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி திருமடத்தைச் சங்கராசாரிய சுவாமிகளாக அருளாட்சி புரிந்து வரும் இந்தத் தவச் செல்வர் 1894 மே-20ம் திகதி விழுப்புரத்தில் அவதரித்தார்.அதாவது இன்றைக்கு நூறு ஆண் டுகளுக்கு முன் ஐய ஆண்டும் வைகாசி மாதமும் அநுஷ நட்சத்திரமும் இந்த மகானின் அவதாரத்தால்



பெருமை பெற்றன. இறையன்பர் சுப்பிரமணிய சாஸ்திரிகள்-மகாலட்சுமி அம்மையார் செய்த தவப்பயன் இந்த ஞான செல்வத்தைப் பெற்றெடுக்க உதவியது.இவர் தன்னுடைய பதின் மூன்றாம் வயதில் ஸ்ரீ காமகோடி பீடத்தின் ஆசாரிய புருசராக(13.2.1907)அருளாட்சி செய்யத் தொடங்கி னார்கள்.இவரை ஸ்ரீ பரமாசார்யாள் என்றும் பெரியவர்கள் என்றும் இறையன்போடு பக்தர்கள் அழைப்பர்.ஸ்ரீ ஆதிசங்கரர் மரபில் 68 ஆவது ஆசாரிய புருஷராக இன்று அலங்கரித்து வரும் ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஞானமே கனிந்த கனியாக விளங்குகிறார்கள்.
1954 இல் ஹவர்டு கான் என்ற அமெரிக்கப் பாதிரியார் ஸ்ரீ சுவாமிகளைத் தரிசித்து அமெரிக்க மக்களின் ஆத்மீக வாழ்க்கைக்கு ஓர் அருள் மொழி கூற வேண்டும் எனக் கேட்டார். அப்போது பரமாச்சார்யர்கள் கூறியது:

" The God is watching you in all that you do, whatever you do, be conscious of his presence"

அமெரிக்க மக்களுக்கு மட்டுமல்ல உலக மக்கள் யாவருக்குமே பொருத்தமான உபதேசம்.சனகாதி முனிவர்களுக்கு சின் முத்திரையால் தட்சிணாமூர்த்தி விளக்கியதைப் போன்றது.நமக்குந்தான் இந்த உபதேசம் எவ்வளவு அருமையாகத் பொரு ந்துகிறது! ஆத்ம ஒளியால் ஆதவனைப் போல் ஜொலிக்கும் தவவேந்தரின் மோனமும் ஒரு உபதேசந்தான்.
சதம் கண்ட ஞானச் செல்வரின்- தவவேந்தரின் பொன்னடிகளை வணங்கிப் பேறு பெறுவோம், வாருங்கள்.

-சிவாயன்-

ஆதாரம்: கலைமகள்

# திருமுறைத் தேன் பருகிப் பாரீர்

ஆதிரை

## திருநாவுக்கரசர் தேவாரம்

விறகிற் றீயின்நன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே

சிவபெருமானின் திருவருளில் திளைத்த திருநாவுக்கரசர் எமக்கும் அவ்வின்பம் கிடைக்க வழிவகைகளைத் தனது திருப்பாடல்களில் அழகிய தமிழில் தெளிவாகத் தந்துள்ளார்.

மேலேயுள்ள திருமுறையில் இறைவன் எவ்வாறு மறைந்து நிற்கின்றான் என்பதும் எத்தகைய முயற்சியினால் அவனது திருவருட்தன்மை வெளிப்படுகின்றது என்பதும் அழகாகக் கூறப்படுகின்றது.

விறகு தனக்குள்ளே தீயை தரக்கூடிய தன்மையை வைத்துக் கொண்டிருப்பது போன்றும், பாலிலே நெய் செறிந்து இருப்பது போன்றும் இறைவன் எம்மகத்துள்ளே உணர்வின்கண் மறைவாகப் பின் நிற்கின்றான். மேலும் சிவபெருமான் சிறந்த ஒளியைத் தருகின்ற மாணிக்கக் கல்லைப் போன்றும் அக் கல்லினுள் மறைந்திருக்கும் ஒளி பயன்படுத்துவார் கைவண்ணத்திற்கமைய பேரொளியாக வெளிப்பட்டுத் தோன்றுவது போன்றும் இருக்கின்றான் என திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

மாணிக்கக் கல்லிலிருந்து ஒளியைப் பெற, விறகிலிருந்துதீயைப் பெற, பாலிலிருந்து நெய்யை எடுக்க எவ்வாறு முயற்சி தேவையோ அவ்வாறே திருவருளை உணர்வதற்கும் நாம் என்ன செய்தல் அவசியம் என்பதை நாயனார் தெளிவாக்குகின்றார்.

சிவபெருமான் எமதுள்ளத்தில் வெளிப்பட வேண்டுமெனில் நாம் அவனுடன் காதல் என்னும் உறவு கோலை நட்டு உணர்வு என்னும் கயிற்றால் முன்னும் பின்னும் பல முறை மாறிமாறி இழுத்தால் இறையின்பம் கிட்டும் என்கின்றார் நாவுக்கரசர்.

இங்கு முறுகுதல் என்பது – மிகுதியாக, நன்றாக என்றும், வாங்குதல் என்பது – இழுத்தல் என்றும், கடைதல் என்பது – கோலின் மேல் கட்டிய கயிற்றை முன்னும் பின்னும் மாறி மாறி இழுத்தல் என்றும் பொருளாகும்.

திருவருள் எங்கே எங்கே என நாம் தேட வேண்டாம் எம்முள்ளே முறுக வாங்கிக் கடைய முன்னிற்பான் முதல்வன் என்று தேவாரம் சொல்வதை உமாபதிச் சிவாச்சாரியார் திருவருட்பயனில் பின்வருமாறு கூறுகின்றார்:

பாலாழி மீனாளும் பான்மைத் தருளுயிர்கள்
மாலாழி யாழ மறித்து.

பாற்கடலிலே வாழ்கின்ற மீன்கள் தமக்கு ஆதாரம் அப் பாற்கடல்தான் என அறியாமலும் அப் பாலைக் குடித்து உயிர் வாழ வேண்டுமென்று உணராமலும் அக் கடலுக்குள் இருக்கும் புழுக்களை வருந்தித் தேடி உண்ணும் தன்மையைப் போல உயிர்களும் திருவருள் தம்முடன் கலந்து நிற்பதை உணராது இருக்கின்றன. இவ்வாறு திருவருட் கடலுக்குள்ளேயே நாங்கள் இருந்து கொண்டு அதனை உணராது தேடி ஓடி அலைந்து கொண்டிருக்கின்றோம்.

இச் சிவனருள் உயிருடனே துணையாக இருப்பதையும் அதனை நாம் உணர்ந்து வெளிக்கொண்டுவர திருத்தொண்டு, சிவபூசை, ஆலய வழிபாடு, தியானம் முதலியன கருவிகளாக அமையும் என்பதையும் திருநாவுக்கரசர் காட்டித்தந்துள்ளார்.


இறைவன் மெய்யடியார்களுடன் கலந்து நிற்கும் தன்மையை திருநாவுக்கரசர் மற்றுமொரு பாடலில் பின்வருமாறு விளக்குகின்றார்.

பண்ணினார் பாடலாகிப்
பழத்தினி லிரதமாகிக்
கண்ணினார் பார்வையாகிக்
கருத்தொடு கற்பமாகி
எண்ணினா ரெண்ணமாகி
ஏழுல கனைத்துமாகி
நண்ணினார் வினைகடீர்ப்பார்
நனிபள்ளி யடிகளாரே

திருநனிபள்ளி என்னும் திருத்தலத்தில் உறையும் சிவபெருமான் – பண்ணுடன் பெருந்திய பாடலாக, பழத்தினில் விரவி நிற்கும் இனிய நற் சுவையாக, கண்களில் நிறைந்த பார்வையாக, மனதில் நினைத்ததை நிறைவேற்றும் அருளாற்றலாக (கற்பம்), எண்ணும் அடியவர்களின் எண்ணங்களாக, நீங்காமல் எழு வகை உலகத்திலும் பரவி நிற்கின்றான்.

இத்தகைய பொருள் ஆழம் மிக்க திருமுறைகளின் சிறப்பினை இங்கு வெளிப்படுத்தத் திறனின்றித் தவிக்கின்றேன். இருப்பினும் நாவுக்கரசர் தமிழில் இன்னும் நிறைய நன் முத்துக்கள் இருக்கின்றன என்பதைக் காட்டும் பொருட்டு அவரது ஆயிரக்கணக்கான திருமுறைகளிலிருந்து இன்னும் நான்கு பாடல்களை மட்டும் குறிப்பிட்டு பொருள் விளக்காது விடுகின்றேன்.





உடம்பெனும் மனையகத்துள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி
உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே.

மனமெனுந் தோணி பற்றி
மதியெனுங் கோலை யூன்றி
சினமெனுஞ் சரக்கை யேற்றிச்
செறி கடலோடும் போது
மதனெனும் பாறை தாக்கி
மறியும் போதறிய வொண்ணா
உனையுனுமுணர்வை நல்காய்
ஒற்றியூருடையகோவே.

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற்
சிவகதி விளையுமன்றே.

மறை கொண்டம் மனத்தானை மனத்துளே
நிறை கொண்டந் நெஞ்சினுள் ளூறவைம்மினோ
கறை கொண்டா னுறையுங் கடம்பந்துறை
சிறை கொண்டவ் வினை தீரத்தொழுமினே

மேற்படிக் கூற்றுக்களை மேலும் வலியுறுத்தும் வகையில் கந்தபுராணத்துள் கச்சியப்பர் பின்வருமாறு பாடியுள்ளார்:

வேதக் காட்சிக்கும் உபநிடத்துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன் புதியரில் புதியன்
மூதக் கார்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆகிக் காதியாய் உயிர்க்குயிராய் நின்ற அமலன்

இறைவனை அறிய வேதத்தைக் கற்பதனால், நுண்ணிய அறிவினால், பாண்டித்தியத்தினால் முடியாது. எவன் அவனை நாடிச் செல்கின்றானோ அவனால் அதை அடைய முடிகின்றது.

ஆத்ம சொரூபத்தை நாடுபவர்கள் அன்றி மற்றவர்களால் ஆத்ம சொரூபத்தினை அறிந்து கொள்ள முடியாது. உள்ளத்தினுள் ஞான தாகம் கிளம்பாவிடின், படிப்பும், உபதேசமும் வாழ்க்கைக்குப் பாரமாகவே முடியும். இதைனாலேயே திருநாவுக்கரசரும் எம்பொருட்டு கருணை கூர்ந்து இறைவனை உறவு கோல் நட்டு முறுகக் கடையும் படி அறிவுறை நல்கியுள்ளார்.

# திருவாசகத் தேன்

**"தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்தானந்தம் ஆக்கியதே-எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்"**

அருள் வேண்டி, மருள் நீக்கி, இருள் நீக்கி ஒளி வேண்டுவதே, திருவாசக உண்மையாகும். அதனாலேயே திருவாசகத்தைத் தேனுக்கு ஒப்பாக்கினர் படித்துணர்ந்தவர். பாமரரும் பக்திப் பரவசப்படவும் பரவிப் பாடவும், வழிகாட்டுகின்றது திருவாசகம். உலக வாழ்க்கை ஒரு பெருங்காடு. இங்கு இன்பமும் உண்டு. துன்பமும் உண்டு. மேடும் உண்டு. பள்ளமும் உண்டு இருள் ஒளி உண்டு. இக்காட்டில் தத்தளித்து வாழும் மானிடனுக்கு



வாழ வழிகாட்டுவதே சமயநெறி. இறை உயிர் தளையை உணர்ந்த சமயக்குரவர்கள் சந்தான ஆசிரியர்கள், சமயமறிந்து மக்களை நெறிப்படுத்தி, தாம் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெற இறையை உணர்த்தும் பல வாசகங்களைத் தந்தனர். அதிலொன்றே திருவாசகம். திரு-அழகு, வாசகம் -வார்த்தை -அழகிய சொல் என்றாயிற்று. அழகிய வாசகத்தை உடையதும் என்றும் கூறுவர். அத்துடன் திருவாசகத்தைப் பாராட்டிய புலவர்கள் பலர் திருவாசகம், மணிவாசகம், மதுரவாசகம், வாசகமாலை, வாசகத்தேன் என்றும் பல பெயர்களையும் தந்துள்ளனர்." திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்பது பழமொழி.

திருவாசகம் தந்த திருவாதவூரரைச் சிந்திக்கும்போது அவர் ஊர் திருவாரூர். "வாதவூரிலே வந்தினிதருளிப் பாதச்சிலம்பொலி காட்டிய பண்பும்" என்ற அடிகளாலும் உணர முடிகிறது. மணிவார்த்தை பேசியதால் மணிவாசகம் என்றும் நாமம் பெற்று அதுவே மாணிக்கவாசகர் என்னும் நாமமுமாயிற்று.

திருவாசகம் பன்னிரு திருமுறைகளில் எட்டாந் திருமுறையாய் ஐம்பத்தொரு பதிக வடிவான 658 திருப்பாடல்களையுடையது. சிவபுராணத்தில் ஆரம்பித்து அச்சோப்பதிகத்தில் முடிவடைகின்றது.

தமிழ் வேதமாகிய திருவாசகமென்னும் தேன் நமது ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் . உலப்பிலா ஆனந்தமாய தேன் உள்ளந்ததும்ப வாச்சிறந்து அமுதம் மயிர்க்கால் தொறும் தேக்கிட என்புத்துளைதோறும் பாய்ந்து நிரம்புந்தேன். நினைக்கும்போதும் காணும் போதும், பேசுந்தோறும் எப்போதும் திருவாசகம் ஒரு ஆனந்தத் தேன். இதனைப்பருகுவதற்கு முன்செய்த தவப்பயன் வேண்டற்பாலது. திருவாசகத்தின் வாச்சியப்பொருள் தில்லைத் திருக்கூத்தனே.

தேன் மலச்சிக்கலை நீக்கவல்லது . மருந்துகளில் ஔடதம் போன்றது. திருவாசகத்தேன் ஆணவமலத்தை அகற்ற வல்லது. அதனாலேயே மருவாநெறியளிக்கும் வாதவூர் எங்கோன் திருவாசகம் என்பதாகக் கண்ட ஆன்றோர் சான்று பகரும் நுட்பம் நுண்ணியதே. தேன்நெஞ்சுக்கு வலியூட்டும். குரலுக்கு இனிமை மிக்குவிக்கும். மிகுதியாக உண்டார்க்கு மலம் கழிக்கும். திருவாசகத்தேன் உயிருக்கு சிவஞான உணர்வினை வலியூட்டும். மிகுதியாக உண்டால் தொல்லை இரும்பிறவிச் சூழும்தளையாகிய மூலமலத்தைக் கழிக்கும்.

**"வான்கலங்க மாணிக்கவாசக நின்வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தின் சுவை கலந்து
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"**

என்று இராமலிங்க வள்ளலாரும் பாடியுள்ளார்.

திருவாசகத்திலுள்ள 51 தலைப்புக்களும் செம்மையும் செழுமையும் நிறைந்தன. திருவைந்தெழுத்தின் மகிமையை உணர்த்த சிவபுராணம் முதலில் "நமச்சிவாய வாழ்க" என்று தொடங்குகின்றது.

சிவனின் அநாதி முறைமையான பழமை இதில் அடங்குகின்றது. புராணம் என்ற சொல்லுக்குப் பழமை என்பது பொருள். கீர்த்தித் திருவகலில் சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை காட்டப் படுகின்றது. திருவண்டப்பகுதியில் இறைவன் சிறியவனாகப் பெரியோனாகியும் சூக்குமமொடு தூலமாகியும் கருதாக் கருத்துடைக் கடவுளாகியும், உலகம் முழுதாய் விரிந்தும் அணுத்தன்மையில் அமைந்தும் பிரமன் மாலறியாப் பெரியனாகியும் எல்லாமாய் அல்லதுமாய் இருக்குந்தன்மை விளங்கப்பெறுகின்றது.

சைவப்பெரியார்
உயர்திரு கா.கதிர்காமத்தம்பி
யாழ்ப்பாணம்

இன்மை வாழ்வைத் தன் தாய் வயிற்றில கருக்கொண்டது முதல் போற்றித் திருவகவலில் கூறுகின்றார். தாய் வயிற்றில் இருந்த நிலை பிறந்து உண்டு உறங்கிக் காளையாகிக் கல்வி கற்று தெய்வப்பற்றுக்கொண்டு மாயாவாதத்தில் சுழன்று பின் பக்தி உறைப்பு ஏற்பட்டு நிற்கையில் இறைவன் ஞானகுரவனாய் வந்து ஞானம் அருளியது இறைவனை நினைந்து நினைந்து வாழ்ந்து வந்தது முதலியன இங்கு குறிப்பிடப்படுகின்றன.

திருச்சதகம் இறையன்பின் உவப்பும், உலக அன்பின் உவர்ப்பும் அடிகள் அநுபவமாக விளைந்ததை விளங்கும் பகுதி தொடர்ந்தும் நீத்தல் விண்ணப்பத்தில் பிரபஞ்சத்தை சத்தெனக்காட்டியதும் திருக்கோத்தும்பியில் சிவனொடு ஐக்கியப்படுவதைக் குறிப்பிடுவதாகவும் திருப்பொற் சுண்ணம் மகளிரின் ஆனந்த மனோலயத்தைக் குறிப்பதாகவும் அமைகின்றது. திருப்பெருந்துறையில் தமக்குப் பிரசன்னமாய் இருக்குமாறு சிவபெருமானுக்கு திருப்பள்ளி எழுச்சி விண்ணப்பமுஞ் செய்து கொண்டுள்ளார். "போற்றி என் வாழ்முதலாகிய பொருளே புலர்ந்தது என எடுத்த எடுப்பிலே இதற்கு விண்ணப்பமளிக்கப்பட்டதாயிற்று. என் விழிப்புக்கு நின் விழிப்பு முன்னிலையாதல் வேண்டும். ஏனெனில் நீயே என் வாழ்முதல் என்பதாகும்.

திருவாசகத்தில் சிறந்து விளங்கும் பாடற்பகுதிகளில் ஒன்று திருவெம்பாவையாகும். திருவண்ணாமலையில் பாடப்பட்டது. கன்னிப்பெண்கள் மார்கழித்திங்கள் வைகறையில் இறைவழிபாட்டுடன் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பி பொய்கையில் நீராடிக் கரை ஏறியபின் நன்கு உடுத்துக்கொண்டு செங்கணவன் பால் திசைமுகன்பால் எங்குமிலாதோர் பேரின்பத்தை வேண்டுவர். மேலும் நல்ல மழை பெய்து நாடு செழிக்கவும் நல்ல சிவனடியாரான காதற் கணவரையும் வேண்டுவர்.

தெய்வம் ஒன்று உண்டு. அது சிவபரம்பொருளாகும் என்பது மணிவாசகரது கருத்தாகும். எனவே தான் அவர் தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்றும் உள்ளேன் பிற தெய்வமல்லாது எங்கள் உத்தமனே என்றும் கூறுகின்றார்."பாடவேண்டும் நான் போற்றி நின்னையே பாடிநைந்துருகி
நெக்கு நெக்கு ஆக வேண்டும் நான்"என்று வேண்டுதல் செய்கிறார். நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே அதுவும் உன்றன் விருப்பமென்றும் இரண்டற்ற நிலையில் நின்று பாடுகின்றார்.

ஓம் நமசிவாய

## யோகியும் போகியும்

நான், நான் என்ற ஆணவம் போகிக்கு வரும்: யோகிக்கு வராது.எல்லாவற்றையும் கடந்த நிலை ஞானியின் நிலை.'என்னுடையது' என்று சொல்ல இறைவனைத் தவிர அவனுக்கு எதுவும் இல்லை.

கடவுள் ஒருநாள் பூமிக்கு வந்தார். தஞ்சாவூர் மிராசுதாரர் ஒருவரைச் சந்தித்தார்.அந்த மிராசுதாரர் ஒரு பெரிய நஞ்சை நிலப்பரப்பைக் காட்டி இவை எல்லாம் என்னுடையவை என்றார்.
தன்னுடைய சொத்துக்களை ஒவ்வொன்றாகக் காட்டி இவையெல்லாம் எனக்கே சொந்தம் என்றார்.
கடவுள் அமைதியாக அவருடைய உடம்பைச் சுட்டிக்காட்டி இது எனக்குச் சொந்தம் என்றார்.
எவ்வளவு பெரிய ஆணவக்காரனும் இறுதியில் இறைவன் என்னும் நெருப்புக்கே சொந்தமாகிவிடுகிறான்.

– கவிஞர் கண்ணதாசன் –

## எல்லாம் சிவலிங்கம்

" திருக்குற்றாலக் குறவஞ்சி" சிவபெருமானின் உவமைகளை எடுத்துக்காட்டும் வகையில் அழகுற பாடப்பட்டுள்ளது. திருக்குற்றால நகரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானாகிய திரிகூட நாதரைத் தலைவராகக் கொண்டுவிளங்குவது. திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப் பெற்றது."

சொல்லழகும், பொருளழகும், கருத்தாழமும், ஓசையின்பமும் மிக்குடையது. இயற்கை அழகிலே இறையழகைக் காட்டுவனவாகும். பாமரரும், அறிஞரும் ஒருங்கே இன்பமடையத் தக்க விதத்தில் கற்பனை, திரிபு, சிலேடை முதலான அணிகள் அழகொழுக விரவி வரப் பாடப் பெற்றுள்ளது. திரிகூட ராசப்பக் கவிராயர் கண்களுக்கு –நெஞ்சத்துக்கு –யாவுமே சிவ லிங்கமாகத் தோன்றுகின்றன.

கிளைகளாய்க் கிளைத்த பல
கொப்பெலாஞ்
சதுர்வேதம் கிளைகள் ஈன்ற
களையெல்லாம் சிவலிங்கம் கனியெலாம்
சிவலிங்கம் கனிகள் ஈன்ற
களையெல்லாம் சிவலிங்கம் வித்தெல்லாம்
சிவலிங்கம் சொரூபம் ஆக
விளையுமொரு குறும்பலவின்
முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டுவோமே.

இப்போது இதனுடைய விளக்கத்தைக் காண்போம். பலாமரம் ஒன்றிலே கிளைகளாகப் பிரித்திருக்கின்ற பல கொப்புகளெல்லாம் நான்கு மறைகள் ஆகும். அக் கிளைகளிலிருந்து தோன்றிய இலைகளெல்லாம் சிவலிங்கங்கள்.அம்மரத்தின் பழங்களெல்லாம் சிவலிங்கங்கள்.அப் பழங்களிலுள்ள சுளையெல்லாம் சிவலிங்கம். அச் சுளைகளிலுள்ள விதைகளெல்லாம் சிவலிங்கம்.இந்தக் குறும்பலாவிடத்தே தோன்றியெழுந்த சிவபெருமானை நலந்தர வேண்டிக் கொள்வோம் என்கிறார் கவிராயர்.

நான்கு மறைகளும் ஒன்று சேர்ந்து ஒரு பலாமரமாகிறதாம்.பிரணவம் வேராகவும், சுருதிகள் முழுவதும் கிளைகளாகவும் இன்றும் நின்று தன் நிழலிலுள்ள சிவபெருமானைத் தொழுது கொண்டிருப்பதாகப் புராணம் கூறும். இதனால்தான் இம் மரத்திற் பழுக்கும் பழங்களை எவரும் பறிப்பதில்லையாம்.குரங்குகள் பிடுங்கித் தின்று விடுமாம்.

## ஒரு வேண்டுகோள்!

கலசம் உங்களின் சஞ்சிகை. உங்கள் சஞ்சிகையை மெருகுபடுத்துகின்ற பொறுப்பு உங்களுடையதே.! உங்களிடமிருந்து நாங்கள் எதிர்பார்ப்பது ஆக்கங்களே. ஆத்மீக உணர்வுள்ள ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். நீங்கள் படித்துச் சுவைத்தவற்றைப் பற்றி எழுதுங்கள். (ஆ–ர்)

# அவதாரம் – ஒருசிந்தனை

## வித்துவான் க.ந.வேலன் Ph.D

மனித சமுதாயத்தை உய்விக்க மகான்கள் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள்.இதுவே வாழையடி வாழை எனவந்த மரபு. உலகம் உய்ய வேண்டும் என்பதைத்தவிர அவர்களுக்கு வேறு நோக்கம் எதுவும் இல்லை.அதற்காக அவர்கள் அடைந்த துயரம் கொஞ்சமல்ல.



தமக்கென வாழாப் பிறர்க்கு உரியவரான இவர்கள் இருப்பதினாலேயே இவ்வுலகம் இருக்கிறது. இத்தகைய பண்பாளர் இல்லையேல் உலகம் மண்புக்கு மாய்ந்துவிடும் என்பது சான்றோர் முடிவு.

எம் போன்ற சாதாரண மனிதர் தமக்கென வாழ்பவர்கள். நான் வாழவேண்டும். என் பெண்டாட்டி வாழவேண்டும் என் பிள்ளைகள் வாழவேண்டும். இவை தவிர எனக்கு உலகமில்லை. ஜனநாயகத்தைப் பயன்படுத்தி மக்களால் வழங்கப்பட்ட பதவியை தம் மக்களுக்கு வாரிசாக்க முயலும் தலைவர்கள் வாழும் காலத்தில் நாம் வாழ்கின்றோம். இவற்றிற்காக நாம் பிறருக்கு எத்தகைய தீமைகளையும் செய்யத் தயங்கமாட்டோம்.

இத்தகையோர் பல்கிப்பெருகி அநீதி தாண்டவமாடும் வேளையில், அரசும் நீதி தவறிய நிலையில் அவ்வப்போது அற்புத நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவையே அவதாரங்கள். அவதாரம் என்பதற்கு மேலிருந்து கீழிறங்குதல் என்று பொருள் கொள்ளப்படுவதுண்டு. ஏதோ மேலிடத்திலிருந்து வானத்திலிருந்து கீழ் இறங்குதல் என இடமாற்றத்தைக் குறிப்பதல்ல.

மேலான தெய்வீக நிலையில் இருந்து அதைவிடக் கீழான மானிட நிலைக்கு இறங்குவதையே அவதாரம் குறிக்கின்றது. தமிழ் நாட்டில் ஆறாம் ஏழாம் நூற்றாண்டில் அறம் தவறிவிட்டது. ஓர் அவதாரம் தேவைப்பட்டது. வேத நெறி சைவத்துறை முதலியன அளிக்கப்பட்டன. வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க பூதபரம்பரை பொலிய ஓர் அவதாரம் தேவைப்பட்டது.

ஞானசம்பந்தர் அவதரித்து புனித வாய் மலர்ந்து அழுதார். மேலாம் தெய்வ நிலையில் இருந்து கீழாம் மனித நிலையை அடைந்தார். அதனை சம்பந்தரே,

*மறக்குமாறு இலாத என்னை*
*மையல் செய்து இம் மண்ணில் மேல்*
*பிறக்குமாறு செய்தனை*

எனப் பாடுகின்றார்.

இறைவா உன்னை மறக்காது வாழ்ந்த என்னை மையல் செய்து பிறக்கச்செய்தாய். இதுவே அவதாரம். இதற்கொரு நோக்கமுண்டு. இராம அவதாரம் ,கிருஷ்ண அவதாரம் ,நரசிம்ம அவதாரங்கள் தோன்றி அநீதியைப் போர் செய்து அழிக்கலாம், அணுக்குண்டு ,வெடிகுண்டு, மனிதக்குண்டு, கண்ணிவெடி, முதலியவற்றாலும் அநீதி அழிக்கப்படலாம்.

அவனை யாரும் நெருங்க முடியாது. அவனுக்கு எந்த உயிராலும் மரணமில்லை. இரவு பகல் எந்த நேரத்திலும் அவனைக் கொல்ல முடியாது. அப்படி அவன் பெற்ற வரபலம் ,அவனை அழிக்க நரசிம்மம் என்ற புதுவித விலங்கே தோன்ற வேண்டியிருந்தது. அவன் செய்த கொடுமைகள் கொஞ்சமல்ல. கொடுமையைக் கொடுமையால் அழிப்பதே அறமாயிற்று. கொலையிற் கொடியாரை ஒறுக்க வேண்டியதாயிற்று.

இரவும் பகலும் மயங்கும் புன்மாலைப்போதில் அவனைக் கொல்ல நேரம் குறிக்கப்பட்டது. கோரமாகக் குடல் சிதறியது. அவன் கொல்லப்பட்டான். இந்தக்கொலைக்கு உடந்தையாக இருந்தவன் ஒரு மகன். அவனே தன் தந்தையின் மரணத்திற்குக் காரணமாக இருந்தான். அவன் அந்த நாட்டின் சர்வாதிகாரி. பலத்த பாதுகாப்பு. அறம்பிழைத்தவர்க்கு அறமே கூற்று. வானவீதியில் விமானம் செவடித்தது. அவன் உடலும் வெடித்தது. சிதறியது.

திருப்பெதும்பூர் ஒரு புண்ணிய பூமி. "அடபாவி நரகத்திற்கு போவாயே ,மூலமந்திரத்தை எல்லாரும் கேட்கச் சொல்லுகிறாயே. அபசாரம். அபசாரம்."

" நான் நரகத்திற்குப் போனாலும் பரவாயில்லை. இதைக்கேட்டு இத்தனை மக்களும் மோட்சம் போவார்களே. அது போதும். " மோட்சம் தரும் மூலமந்திரத்தை சேரவாரும் செகத்தீரே என எல்லோருக்கும் வாரி வழங்கிய அருளாளன். ராமானுஷன் அவதரிக்க தவம் செய்த தலம் அது.

அந்தப் பூமியில் இரத்தம் சிந்தியது. உடல்கள் சிதறின. பாரததேசப் புதல்வன் ஒருவன் பரிதாபகரமாக மாண்டான். யாருக்குத் தெரியும் இன்று பொழுது இப்படி விடியும் என்று. வழக்கம் போல மேதினம் களை கட்டியது. கொழும்பு மாநகரை நோக்கியே எல்லா வீதிகளும் சென்றுகொண்டிருக்கின்றன. கட்சிகள்,கட்சிக்கொடிகள், வீதிவீதிக்கு விழாக்கோலம் .

ஜனாதிபதி மாளிகையில் நிம்மதியாகத் தூங்கி எழுந்த அந்த உடல் நண்பகலில் நடுத்தெருவில் உருத்தெரியாது சிதறிக்கிடக்கின்றது.

இராமனாகக் கோதண்டம் ஏந்தவேண்டியதில்லை. கண்ணனாகச் சாரதியம் செய்ய வேண்டியதில்லை. நரசிம்மனாக நகத்தால் கிளிக்கவேண்டியதில்லை.

விண்ணிலே வெடிகுண்டாகவும் மண்ணிலே மனிதக் குண்டாகவும்,அவதரிக்கலாமல்லவா? அவதார நோக்கம் எதுவோ அது நிறைவேறுகின்றது.
ஆகா என்று எழுந்தது பார் யுகப்புரட்சி.

*சமயமுளபடிக்கெல்லாம்*
*அறங்கொன்ற சுமடர்.*

சடசடவென்று சரிந்ததை ,சரிவதை அன்று காவியம் பாடிற்று. இன்று வரலாறு எழுதுகின்றது.

***பத்தினிப் பத்தர்கள் தத்துவ ஞானிகள்***
***சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்.***
***அத்தமும் ஆயுளும் ஆண்டொன்றில் மாய்ந்திடும்***
***சத்தியமும் ஈது சதாநந்தி ஆணையே.***

என்பது திருமூலர் வாக்கு.
பத்தினிப்பெண்டிர் உண்மையான இறைபக்தர் ,தத்துவம் உணர்ந்த ஞானிகள் ஆகிய இம்மூவகையினரும் உலகியல் பித்தலாட்டங்கள் பொய்மைகளிலிருந்து தோற்றத்தினாலும் செயலாலும் ஒதுங்கியே இருப்பர்.
இவர்கள் தம்மோடு ஒட்டவில்லை என்ற காரணத்தால் உலகவர் அவர்களது சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தால் செய்தவர்கள் எத்தகைய செல்வம் செல்வாக்கு உடையவராயினும் அவை அழிந்து விரைவில் மடிவர். இது இறையாணையாக சத்தியமாகும்.
இந்தப் பேருண்மையைக் காஞ்சியில் காமகோடியாக (காமத்தை அழித்தவராக ) வாழ்ந்துகொண்டிருக்கும் காஞ்சி முனிவரின் நூற்றாண்டுச் சிந்தனையாக நினைவு கொள்வோம்.

## பிரதோஷ தினத்தன்று ஈசனை வணங்கும் முறை

பிரதோஷ தினத்தன்று மட்டும் சோம சூத்திரப் பிரதட்சணம் என்ற முறையில் ஈசனை வணங்கவேண்டும் . இம் முறையில் முதலில் ஈசனையும் , நந்திமகேசுவரரையும் தரிசனம் செய்து கொண்டு அங்கிருந்து அப்பிரதட்சணமாக சண் டேசுவரர் வரை சென்று அவரை தரிசனம் செய்து கொண்டு , திரும்பி வந்து முன்போலவே ஈசனையும் நந்திதேவரையும் தரிசனம் செய்து கொண்டு , கருவறையை வலமாக வந்து கோமு கத்தைக் கடக்காமல் வந்த வழியே வந்து ஈசனையும் நந்திகேசுவரரையும் தரிசனம் செய்ய வேண்டும். இவ்வாறு மும்முறை செய்தால் அநேக அசுவமேதயாகம் செய்த புண்ணியம் கிடைக்கும் என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

# ஆறுமுகங்கள்

ஈசானம், தத்புருஷம்,அகோரம், வாமதேவம், ஸத்யோத்யாதம்,அஜோமுகம்,

## பகவானை அடைய சுலபமான வழி

பசுவின் பாலிலிருந்து தயிர், தயிரிலிருந்து மோர், மோரிலிருந்து வெண்ணெய், வெண்ணெயிலிருந்து நெய் என்று எத்தனை வகை வகையாக நாம் பிரித்தெடுக்கிறோம். ? அதே போல ஆழ்ந்த அனுபவம், அன்றாடப் பிரார்த்தனை, கருணை, பழகுதல் , இவற்றை நம் வாழ்வில் கைக்கொண்டு நடந்தால் பாலுக்குள்ளே மறைந்து கிடக்கும் நெய்யைப்போல பகவான் உங்கள் அத்தனை பேர் மனதிலும் உறைந்து கிடப்பது தெரியும்.

– உபநிஷதம்

## அருள்வாக்கு

க்ருஷ்ண யஜுஸில் உள்ள தைத்திரீ யோபநிஷத்திலும் தானத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது.
அது என்ன சொல்கிறது? " **சிரத்தையோடு தானம் கொடுக்கவேண்டும். அசிரத்தையோடு கொடுக்கக் கூடாது."** என்கிறது ஸ்ரீயை(அதாவது செல்வத்தை)க் கொடுக்கும் போதே மனஸை ஸ்ரீயாக (லக்ஷ்மீகரமாக, மங்களமாக, ஸந்தோஷமாக) வைத்துக் கொண்டு கொடுக்கவேண்டும் என்கிறது. முகத்தைச் சுளிக்காமல் கொடுக்கவேண்டும். ஸ்ரீயில் (செல்வத்தின்) நிறைவுதான் ச்ரேயஸ் என்பது. மனஸில் ஸ்ரீயுடன் மனமலர்ச்சியுடன் கொடுத்தால் இந்த தானத்தின் பலனாக ச்ரேயஸ் கிடைக்கிறது. இன்னம் ஜாஸ்தி கொடுப்பதற்கு நம்மால் முடியவில்லையே என்று வெட்கத்தோடு கொடுக்க வேண்டும். ஹ்ரீயுடன் கொடு என்கிறது உபநிஷத். ஹ்ரீ என்றால் வெட்கம், லஜ்ஜை என்று அர்த்தம். புருஷ ஸூக்தத்தில் பகவானுக்கு ஹ்ரீ, ஸ்ரீ(லக்ஷ்மி) என்று இரண்டு பத்னிகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறது. இங்கேயும் லக்ஷ்மியை அதாவது பொருளைத் தரும்போது "ஸ்ரீயோடு கொடு", " ஹ்ரீயோடு கொடு" என்று சொல்லியிருக்கிறது. வெட்கம் இரண்டு காரணத்துக்காக. ஒன்று, இன்னும் ஜாஸ்திதர முடியவில்லையே என்று. இரண்டாவது தானம் பண்ணுவது வெளியிலேயே தெரியக்கூடாது என்ற கௌரவமான கூச்சம். வெளியில் தெரிந்தால் மற்றவர்களும் 'தேஹி' என்று பிடுங்குவார்களோ என்பதால் அல்ல.இவன் தர்மிஸ்டன் என்று நாலு பேருக்குத் தெரிந்து நம்மை ஸ்தோத்திரம் பண்ண ஆரம்பித்தால் நமக்கு அஹம்பாவம் வந்து விடும். அது தானத்தின் பலனையெல்லாம் சாப்பிட்டுவிட்டுப் போய்விடும்.

**–ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.**

# குறளோசை

"தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து"

இக்குறட்பாவின் பொருள் யாதெனில் பகைவர்கள் தொழுகின்ற கையின் உள்ளேயும் படைக்கலன் ஒளிந்திருக்கும். அவர்கள் வடிக்கும் கண்ணீருக்குப் பின்பு கேடும் அமையும்.

ஆனால் இறைவன் மாட்டுத் தளராத நம்பிக்கையும் அன்பும் கொண்டவர்களுக்கு பகைவர்கள் ஒருபோதும் பகைவர்களாக நோக்க மாட்டார்கள். எல்லா உயிர்கள் இடத்தும் அன்பு கொள்வர். தீமைகளைச் சிந்திக்கமாட்டார்கள். தம்மிடம் வரும் கேடுகளுக்கு துளியேனும் அஞ்சமாட்டார்கள். இந்த வகையில் வாழ்ந்து இறைவன் திருவடிகளை அடைந்த மெய்ப்பொருள் நாயனார் வாழ்வியலில் ஏற்பட்ட சம்பவத்தை நோக்குவோம்.



இறைவன் உண்மைப்பொருளை அறிந்தவர். மெய்ப்பொருள் நாயனார் தமிழ் நாட்டின் ஒரு பகுதியான சேதி நாட்டை ஒரு காலத்தில் ஆண்டவர். பெண்ணை நதியின் பயனால் வளம் கொழித்து எல்லா நலனும் பெற்ற புகழ் கொண்ட நாடு . நாயனார் நாள் தோறும் சிவபூசை செய்த பின்பே உணவருந்துவார். சிவபிரான் இடத்து அளவிலா பக்தி கொண்டவர். சிவனடியார்களைக் கண்டால் சிரம் தாழ்த்தி வணங்குவார். இவருடைய அமைச்சரும் மற்றையோரும் நற்குணங்கள் நிறைந்தவர்கள். தலைவன் சொல்லை சிரம்மேற்கொண்டு மதிப்பார்கள். இதனால் இவருடைய ஆட்சியில் மக்கள் குறைவின்றி குதூகலமாக வாழ்ந்தனர்.

எந்த ஒரு நல்லரசனுக்கும் பகைவன் இருப்பது வழமை. இதற்குப் புறம்பானவர் அல்ல நாயனாரும். நாயனாருக்கு முத்தநாதன் என்ற பகையரசன் இருந்தான். அவன் நாயநாரை வெற்றிகொள்ளப் போர் தொடுத்தான். நாயனாரோ பக்தியின்கனலாகப் போரிலும் வீரத்திலும் சிறந்து திகழ்ந்தான். அதனால் முத்தநாதனால் போரில் நாயனாரை வெற்றி கொள்ள முடியவில்லை. முத்தநாதன் ஆபோரில் புறமுதுகிட்டு அஞ்சியோடினான். அஞ்சியோடிய பகைவனைக் கொல்ல விரும்பாத நாயநார் தன்னாட்டுப் பாதுகாவலை பலப்படுத்தினான். மக்களின் அன்பில் கட்டுப்பட்ட நல்லாட்சியைக் குலைக்க பலவழிகளிலும் முயற்சித்தான் முத்தநாதன். அவனது எண்ணங்கள் பலிக்கவில்லை. இறுதியில் சிவவேடம் தாங்கி நாயநாரை கொல்ல எண்ணம் கொண்டான். தலையிலும் கழுத்திலும் கைகளிலும் உருத்திராக்கமாலை அணிந்தான். உடல் முழுவதும் விபூதி பூசிக் காவியுடை தரித்தான். கையில் புத்தகக்கட்டும் எடுத்துக்கொண்டு அரண்மனை ஏகினான். சிவனடியார்களுக்குத் தடையேதும் இல்லை.அதனால் நேரே உள்ளே சென்றான். நாயநாரும் அரசகருமங்களை முடித்துவிட்டு ஓய்வெடுக்க தனியறையில் சென்று துயின்றார். அருகில் தேவியும் இருந்தாள்.

முத்தநாதன் உள்ளே செல்வதை அறைக்காவலன் தத்தன் தடுத்தான். தத்தனைத் தள்ளி விட்டு முத்தநாதன் உள்ளே சென்றான். தேவியும் எழுந்து நாயநாரை எழுப்பினாள். நாயனார் சிவவேடம் தாங்கி வந்தவனை வணங்கி ஆசனம் நல்கி அன்பு மொழி பேசினார்.

அப்போது முத்தநாதன் "அரசே நினது சிவபக்தியையும் சிவனடியார்மாட்டு நீர் கொண்டுள்ள பக்தியையும் கேள்வியுற்று உம்மை வாழ்த்தி வணங்கிச் செல்ல வந்தேன். நான் கைலயங்கிரியை அடுத்துள்ள மலைப்பகுதியில் பல காலம் தவம் செய்த பயனால் எனக்கு இந்த ஆகமநூல் கிடைத்தது. இதுவரையில் இதுபோல் சிறந்தது எதுவுமில்லை. இதன் பொருளை உமக்கு உணர்த்திச் செல்ல மனங்கொண்டுள்ளேன். வேறு காரணம் இல்லை" என்று முடித்தான்.

முற்றும் உண்மை என்று உணர்ந்த நாயனார் அந்த சிவாகமத்தின் பொருளை அறிய அவாக்கொண்டார். தங்கள் வடிவில் சிவனைக் காண்கிறேன். என்று சொல்லி சிவனடியாரின் உபதேசத்திற்கு அமர்ந்தார். அப்போது முத்தநாதன் சிவாகம உபதேசத்தின் போது பெண்கள் நிற்பது ஆகாது என்றான். தேவியும் விலகிச் சென்றாள். நாயநார் கண்ணை மூடித் தியானத்தில் இருந்தார். முத்தநாதன் புத்தகத்தை எடுப்பது போல் அதனுள் மறைத்து வைத்திருந்த சிறியகூரியவாளை எடுத்து நாயனார் முதுகில் குத்தினான். நாயனார் சிவ....சிவா..... என்று அலறி கீழே விழுந்தார். தத்தன் உடனே சென்று தன் வாளை உருவி முத்தநாதனை கொல்ல ஓங்கினான். நாயனார் அப்போது "தத்தா நம" என்று கூறி தடுத்தார். சிவவேடம் கொண்டவரை சிறுமை செய்தல் தகாது. இவனைப் பத்திரமாக ஒரு தீங்கும் உண்டாகாமல் நாட்டின் எல்லைக்கு அப்பால் விட்டுவிட்டு வா. இது என் ஆணை" என்றார். தத்தனும் அப்படியே செய்துவிட்டு மீண்டு "நாயனார் ஆணை நிறைவேற்றப்பட்டது " என்று கூறினான். சில நிமிடத்தில் நாயனார் தேவியையும் அமைச்சர்களையும் மற்றவர்களையும் அழைத்து "சிவனடியாரைக் கண்டால் அன்னமிட்டு உபசரியுங்கள். சிவபக்தியைப் போற்றுங்கள் . சிவானந்தச் செல்வம் பெற்று பெருவாழ்வடையுங்கள் என்று மொழிந்து சிவபிரான் பாராதவிந்தங்களைப் பற்றினார். வீடுபேறு அடைந்தார்.

ஆகவே தொழுது நிற்கும் பகைவரினால் துன்பம் வரும் என்றது உண்மை. ஆயினும் சிவபெருமானிடத்து அளவில்லா பக்தி கொண்டு அவன் திருவடிகளைப் பற்றி நிற்பவர் எப்போதும் இறைவனின் பேரின்பமான முத்தியை அடையமுடியும். பகைவர்களுக்கும் அஞ்சமாட்டார். அவர்கள் இறைவன் ஒருவனுக்கே அஞ்சி அவனைத் துணையாகப் பற்றுவார்கள். அவனது நித்தியானந்தத்தை நித்தமும் அடைவார்கள்.

**உமா ஜெயக்குமார்**

# ஆவணி மூலம்

## ரவீ நடராசா

## மூலம்

தமிழுக்கு ஆவணி மாதத்தில் வரும் மூல நட்சத்திரத்தில் மதுரையில் நடைபெற்ற அற்புதம் இப் பண்டிகைக்கு ஆதாரமாக அமைந்து விட்டது. இங்ஙனம் ஏற்பட்ட அனுபவங்களுக்குப் பிறகே ஆடிப்பிறப்பும், ஆடிப்பெருக்கும் அணை கட்டுவத ற்கும் அணை கட்டிய வெள்ளத்தை விவசாயத்திற்காகத் திறந்து விடும் வழக்கத்திற்கு வழிவகுத்தது எனலாம்.

## ஆன்மாக்களின் ஈடேற்றம்

இந்துக்கள் இருவிதமான சக்திகள் இந்த பிரப ஞ்சத்தை ஆட்சி புரிவதாக நம்புகின்றார்கள். இதில் ஒரு சக்தி ஆன்மாக்களுக்கு ஆதரவாகவும், மற்றச்சக்தி ஆன்மாக்களுக்குப் பாதகமாகவும் இருப்பதாக நம்புகின்றார்கள்.

பிரபஞ்சமானது நீதி வழுவாது ஆட்சி செய்யப்ப ட்டுவரினும் அவ்வப்போது அழிவு சக்தி ஆன்மாக்களை அவ்வப்போது பாதித்து விடுவது தவிர்க்க முடியாததே. இரவு நடுநிசிக்கும் அதிகாலை நாலு மணிக்கு மிடையிலான காலப்பகுதியில் இயங்குகின்ற சக்தி மனித மத சம்பிரதாய ஆன்மாக்களுக்கு எதிரான வகையில் இயங்குகின்றது. ஆவணி மாதமானது நிருத்தி என்ற அசுரன் ஆட்சி செலுத்தும் மாதமாகையால் , அசுர குணங்கள் அவ்வப்போது தலைதூக்கி ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்குப் பங்கம் விளைகிறது. ஆன்மாக்கள் தெய்வபக்தியோடு ஒழுகி அசுர சக்தியால் ஏவப்படும் கெட்ட ஏவலிலிருந்து பாதுகாத்து தத்தம் ஈடேற்றத்திற்கு முயல இந்த தினத்தை விரதமாக அனுஷ்டிப்பர். ஏற்கனவே இறந்த உறவினர்களது ஆன்மாக்களோடு தொடர்பு கொண்டு அவர்க ளது(இறந்தவர்களது) ஈடேற்றத்திற்கும் அவர்கள் மூலம் வாழுகின்ற ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கும் ஈசனாகிய மூலத்தை பிரார்த்திப்பதே சிறந்தது.

## வைகை நதி வரலாறு—

வைகை நதியை தென்பாண்டி நாட்டிலே பொய்யாக் குலக்கொடி என்பார்கள். வைய என்ற பெயரும் உண்டு. பாண்டிய மன்னனுக்கு பார்வதி தேவி மகளாகப் பிறந்து சிவபெருமான் கணவனாக அடைய வேண்டினாள். சிவபிரான் பார்வதியின் திருமண வைபவத்திற்கு தேவர்கள் பூதகணங்கள், யாவரும் வந்திருந்தனர். குண்டோதரனும் வந்திருந்தான். மலை மலையாய் உணவு வகைகள் , அன்னக் குவியல்கள், அவனது பசியைத் தணித்தன. தாகம் நாவை வரட்ட ஏரிகள் குளங்கள் யாவற்றையும் காலியாக்கியும் தாகம் தீரவில்லை. சிவபிரானைச் சரணடைந்தான்.

சிவபிரானும் தனது ஜடையிலிருக்கும் கங்கையை மதுரை மாநகருக்கு ஓர் ஆறாகப் பெருகி வருவாயாக எனப் பணித்தார். கங்கை கரம் குவிந்து இறைவா இப்பாரத நாட்டின் புனித மண்ணில் தாங்கள் விரும்புமிடமெல்லாம் நான் நதியாக உருவெடுப்பேன். எனது ஒரு வேண்டுகோள் எனது நீரிலே மூழ்கின்றவர்கள் புனிதமடைய வேண்டும் என்றாள். இறைவன் அவ்வாறே அருளினார். குண்டோதரனின் தாகம் தணிந்தது.

அங்கனமே கங்கை, வைகை என்னும் பெயருடன் கரைபுரண்டோடி வந்தாள் என்கின்றது புராணம். இளங்கோவடிகள் இதன் நீரோட்டத்தின் சிறப்பை மிக அழகாக வர்ணித்துள்ளார். வைகையிலே வெள்ளம் கரைபுரண்டோடி வர அதிலே மக்கள் நீராடி மகிழும் காட்சியும் நீர்த்துறையிலே படகுகளும் நாவாய்களும் வந்து நிற்கும் வனப்பும் இணையற்றது.

இதன் கரையிலுள்ள மதுரை நகரம் நான்மாடக் கூடல் எனப் புகழ் பெற்ற நகரம். இன்றும் இதன் புகழ் குன்றவில்லை. மதுரை மீனாட்சியின் ஆலயம் நகரத்தின் நடுவே கம்பீரமாய் நிற்கின்றது. இதன் பரப்பளவு 15 ஏக்கராகும்.

காப்பி, தேயிலை , ஏலக்காய், பழத்தோட்டங்கள் , சந்தனம், மூங்கில் , தேக்கு, எனும் பயிர்களுக்கு ஜீவன் அளிக்கும் வைகை அணைகளாலும் திருப்பங்களாலும் மதுரை செல்வச் செழிப்புடன் இன்றும் விளங்குகின்றது.

## மதுரையில் அற்புதம்.

தேவலோகத்து மன்னன் இந்திரன் மதுரையை ஆட்சி புரிந்து வந்த அரிமாதவ பாண்டியன் மீது கொண்ட கோபத்தால் மதுரையை வரட்சியாக்கி வைகை நதியையும் வரட்சியால் வாடவைத்துச் சோதித்தான். மக்களும் மன்னரும் மதுரை சுந்தரேஸ்வரரை பிராத்தனை செய்ததன் பலனாக ஒரு நாள் ஆவணியில் சிறு நேர மழை பெய்தது. ஆனால் பெரிய வெள்ளமாக அது கடலுக்கு வீணாகி வைகை பெருக்கெடுத்துக் குடிமக்களைச் சோதிக்கப் போவதை உணர்ந்த அரிமாதவ பாண்டியன் வெள்ளத்தைக் கடலுக்கு வீணாகாமலும் மக்களது உடமைகளைப் பாதிக்காமலும் பாதுகாக்க அணை கட்ட உத்தரவு பிறப்பித்தான். " வைகை ஆற்றின் வெள்ளம் தடுக்க குடிக்கோர் ஆள் வருக" ஆணை கேட்ட குடிமக்கள் வெள்ளமெனத் திரண்டு வெள்ளம் தடுத்தனர். ஆனால் ஒரே ஒரு குடி வெள்ளந்தடுக்க ஆளனுப்ப முடியாது தவித்தது. கிழவி வந்தி உடலால் முதுமையெய்தியும் பிட்டு விற்று ப்பிழைக்கும் நிலையில் கூலிக்கு ஆள் பிடிக்க முடியாது, தன் பங்கை அடைக்க சுந்தரேஸ்வரரிடம் கோரினாள். அவளின் பிரார்த்தனைக்கு இரங்கினான்.

எம்பெருமான் தட்டும் மண்வெட்டியும் தாங்கி "கூலியோ கூலி" எனக் கூவி கிழவி வந்தியின் உருந்த பிட்டுக்கு மண் சுமக்க இசைந்தார். பிட்டோடு போன பரமன் மண் சுமப்பதை விட்டு பிட்டை சாப்பிடுவதும் மற்றவர்கட்கு பிட்டை தானம் பண்ணி அவர்களது வேலையையும் கெடுத்தான். தான் பல அற்புதங்கள் செய்பவன் என்று வெட்டிப் பேச்சுப் பேசி பலரது வேலைக்கும் சோதனை வைத்தான். அரண்மனைக் காவலர் கண்டித்தும் கிழவியின் பிட்டு தீர்ந்ததும் அணை வேலை மட்டும் முடிந்தபாடில்லை. உச்சி வெய்யில் கண்ட சுந்தரேசர் அணைவேலையை விட்டு பிட்டு உண்ட களைப்பில் இளைப்பாறினார். மாலையானது மன்னன் வெள்ளத்தடுப்பு வேலையைப் பார்வையிட வருகின்றான். அடைபடாத வெள்ளப்பகுதிக்குரிய வந்தியின் ஆளை வெகுண்டு அடிக்கின்றான் பிரம்படிபட்டது. வையத்துயிர்க்கெல்லாம் அடித்தவன் உட்பட அடி விழுந்தது.சுந்தரேசர் மறைந்தார். அசரீரியில் மன்னன் தன் தவறை உணர்ந்தான்.

1.திருத்தொண்டின் நெறியை உலகுக்கு உணர்த்தவே இறைவன் கொற்றனாக வந்தனன். செருக்குடைய மன்னன் ஒருபிடி மண் கூட அள்ளிப்போடாதது அவமானம்.

2. சமுதாயத் திருத்தொண்டுகளைச் செய்வதில் எல்லோரும் பாகுபாடின்றி ஈடுபட வேண்டுமென்ற படிப்பினை

3.இறைவன் தொண்டுக்கு வந்ததும் பொன்னும் பொருளும் கேளாது வெறும் பிட்டுக்கு மண் சுமந்தான். உலக உயிர்களுக்கு உணவு தேவை. தனக்குத் தேவையான அளவு ஒன்றையே இவ்வுலகிலிருந்து பெற்றுக்கொண்டு பொன் பொருளில் ஆசையின்றி திருத்தொண்டை(சிரமதானமாய்ச் ) செய்ய வேண்டும் என உணர்த்தினார்.

4. பிட்டுக்கும் மண்ணுக்கும் பந்தம் வைத்து பின் ஏன் கடமையிலிருந்து தவறி நாடகமாடி அடிபட்டார். வாழ்க்கை கடமையோடு பிணைக்கப்பட்டது. கடமையைச் செய்யத் தவறுகின்றவர்கள் கடுந்தண்டனைக்குரியோர் என்பதை வையகத்திற்கு எடுத்துக்காட்டவே

5. உலக உயிர்கள் அனைத்தும் இறைவனின் இருப்பிடம் என்பதை உலகு உணரவே அவன் மீது விழுந்த அடி உலகம் முழுவதும் விழுந்தது.

6. இயலாதவர்களுக்கு உதவுதல் மன்னரது கடமை, கட்டளையிட்டுவிட்டு நாம் தலைவரல்லவா தொண்டர்கள் செய்யட்டுமே என்ற போக்கு கண்டிக்கப்பட வேண்டியதே எனவும் மன்னரை உணர வைத்தான்.

மன்னராட்சி போய் மக்களாட்சி நடைபெறுகின்ற காலத்தும் வெள்ளமும் மழையும் வரட்சியும் மக்களைச் சோதிக்கிறது. சோமாலியா சூடான் எதியோப்பியா தற்போது மிஸ்சூரி, மிஸிஸிப்பி நதிகள் வெள்ளப்பெருக்கெடுக்கின்றன.அதிபர் கிளின்டன் தானும் மண்ணை அள்ளிச் சாக்குக்குள் போட்டு அணைகட்ட உதவியும் மக்களை அணைத்து ஆறுதல் சொல்லியும் மக்கள் துயரத்தில் பங்கெடுத்தும் மக்கள் சேவையே மகேசன் சேவை என உணர்த்திருக்கிறார். ஆக இயற்கை மூலமாக ஆண்டவன் மனிதர்களுக்கு நல்ல புத்தி புகட்டி விடுகிறான். ஆடிப்பெருக்கு அமெரிக்காவிலும் நடக்கிறது. உலகம் முழுமையானது. அதன் ஒவ்வொரு பகுதியிலும் மனிதாபிமானம் வேண்டும். மற்ற நாடுகளுக்கு குண்டு மழையிட்ட அமெரிக்காவுக்கு இன்று இயற்கை மழை குண்டாக துயரம் கொடுக்கிறது.

பொதுவாகவே மானிடரைத் தவிர மற்ற உயிரினங்கள் எல்லாமே நிறையக் கொடுக்கும் . குறைவாகப் பெறும். மரங்கள், பசு, நந்தி, என்று பார்த்தால் நம்மிடத்தில் பெறுவது குறைவு ஆனால் நமக்குத் திருப்பித் தருவது அதிகம். இது தான் நாகரிக வாழ்க்கை. பண்பாட்டு வாழ்க்கை!

## கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு என்ஆற்றும் கொல்லோ உலகு

தமக்கு நீரைத் தருகின்ற மேகங்களுக்கு உயிர்கள் என்ன கைம்மாறு (பதில் உதவி) செய்கின்றன.? நாம் அதற்கு கைம்மாறு செய்ய இயலாது என்பது உண்மை.

ஆயினும் மழைக்குரிய சாதனங்களாகிய ஆறு, அணைகள், ஏரி, குளங்கள், வாய்க்கால்களைப் பராமரிப்பதும் புயலை நீர்த்திவலைகளாக மற்றும் குளிர்ச்சியைத் தரக்கூடிய மரங்களை வளர்ப்பதும் இருப்பவற்றை பாதுகாப்பதும் நாம் மழைக்குச் செய்யும் கைம்மாறு!

மானிடரோ சமுதாயத்திடமிருந்தும் மற்ற உயிர்களிடமிருந்தும் நிறையப்பெறுகிறார்கள். ஆனால் மிகமிகக் குறைவாகவே திருப்பித் தருகிறார்கள் . சிலர் திருப்பித் தருவதே இல்லை! அதனாலேயே மழை குறைகிறது. ஒரு புறம் வெள்ளமாகி அழிக்கிறது .

இறைவனுக்கு உவப்பானவை கற்கோயில்கள் அல்ல! உடற் கோயிலே மனக்கோயில். இறைவன் கற்கோயில்களில் எழுந்தருளுவது முதல் நிலை! அங்கு வரும் மனிதர்களைச் சந்தித்து உறவாடிப் பக்குவப்படுத்தி அவர்தம் உடற் கோயிலில் எழுந்தருளுவது அடுத்த நிலை. இவ்வாறாக இயற்கை தரும் பாடங்களிலிருந்தும் புராணக் கதைகளிலிருந்தும் ஒப்பிட்டு நோக்கி முன்னேற முயற்சி செய்வோம்.

### விபூதி

விபூதி என்பது பசுமாட்டினுடைய சாணத்திலிருந்து பஸ்மமாக்கப்பட்டு சுத்த வெளுப்பாக இருக்கின்றது. இந்த விபூதியை உடலில் தரித்துக்கொள்வதால் தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் எல்லாம் அகன்றுவிடும். அத்தோடு அந்த விபூதியினுடைய சத்து உடலில் உள்ள உரோமங்களின் வழியாக உள்ளுக்கிறங்கி வியாதிகளுக்கு ஆதாரமாயுள்ள கிருமிகளை அழித்துவிடுகின்றது. நெற்றியில் சிறிது இட்டுக்கொள்வதால் லட்சுமி கடாட்ஷம் ஏற்படுகின்றது.

—ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குருஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

# பண்ணார் தேவாரத் திருமுறைகள்!

# இராகங்கள் உருவாக தேவாரப் பண்களே அத்திவாரம்!

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் பாடியவை தேவாரங்களாகும். இம் மூவரின் பாடல்களும் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டன. "தோடுடைய செவியன்" என்ற முதல் தேவாரத்தினைப் பாடி யருளியவர் ஆளுடையபிள்ளையாகிய திருஞான சம்பந்தர் ஆவார். திருஞானசம்பந்தரும் –அப்பர் அடிகளும் ஒரே காலத்தில் (7ம் நூற்றாண்டில் ) வாழ்ந்தவர்கள். சுந்தரர் இவர்களுக்குப் பின் வாழ்ந்தவர்.

திருஞான சம்பந்தர் இறைவன் அருளால் பொற் றாளம் முத்துப்பல்லக்குப் பெற்றவர். ஆலயங்கள் தோறும் அடியார்கள் புடைசூழச் சென்று தேவார த்திருப்பதிகங்களைப் பாடியருளினார். திருநீலகண்ட யாழ்பாணர் சம்பந்தரின் பாடல்களைத் தமது யாழில்



இட்டு வாசித்து வந்தார். அப்பர் அடிகளுடனும் சேர்ந்து திருஞானசம்பந்தர் ஆலயங்களிலே தேவாரம் பாடியுள்ளார். சுந்தரமூர்த்தி நாயனாருடைய தேவா ரங்கள் ஏழாந்திருமுறையாகும். மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம், திருக்கோவையார் என்பன எட்டாந்திருமுறையாகும். இந்நால்வரின் பொற்பா தங்கள் எமக்கு உயிர்த்துணை என்கிறார் எல்லப்ப நாவலர் அவர்கள். தேவாரங்கள் பாடப்படுவது பண் அமைப்பு முறையிலாகும். பண் என்றால் என்ன? இராகம் என்று சிலர் சொல்லுகிறார்கள். இது சரியல்ல. பண் என்பது சங்க காலத்தில் இருந்து வந்துள்ள ஒரு அமைப்பு ஆகும். நிலத்தினை ஐந்தாகப் பிரித்தார்கள். ஐந்திணைகளுக்கும் பண்கள் வெவ்வேறாக இருந்தன. பகல்பண், இரவுப் பண், பொதுப்பண், என்றும் இருந்தன. இப்பண்ணை இசைத்தோர் பாணர் எனப்பட்டனர். இவர்களிற் பெண்பாலோர் "விறலி " எனப்பட்டனர். இவர்கள் பாடும்போது இசைத்த இசைக்கருவிகள்"யாழ்கள்" எனப்பட்டன. எத்தனையோ விதமான யாழ்கள் வாசிக்கப்ப்ட்டன.

"சீறி " யாழ்!, பேரியாழ்!, மகரயாழ்!, செங்கோட்டு யாழ்! எனப்பலவகைப்பட்ட இசைக்கருவிகள் அக் காலத்தில் இருந்தன. யாழ் என்பது நரம்பு அல்லது தந்திகளைக் கொண்ட வாத்தியக் கருவி. சில யாழ்களில் குறிப்பிட்ட ஒரு பண்ணையே வாசிக்க முடியும். இந்த இசை நுணுக்கங்களை எல்லாம் ஆராய்ந்து எமக்கு அளித்தவர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாவர் அப்பெருமகனார் பல வருடங்கள் ஆராய்ச்சி செய்து யாத்த யாழ்நூல் இசைக்கலையின் பொக்கிஷம் எனலாம். பெரும் பாலும் ஆலயக் கோபுரச்சிற்பங்களை ஆராய்ந்து அடிகளார் நூலை வெளியிட்டார். அவர் தேவாரப்பண்கள் பற்றி விசேடமாக தமது நூலில் கூறியுள்ளார். முற்காலத்தில் 103 பண்கள் இருந்தன என்றும் தேவாரப்பண்கள் உள்ளத்தை உருக்க வல்லன என்றும் கூறிய சுவாமி விபுலானந்தர் திருஞானசம்பந்தரை வானளாவப் புகழ்ந்துள்ளார். ஆளுடைய பிள்ளையின் பண் கைவந்த ஆற்றல் பெரிதும் போற்றற்குரியது. 16 வயதில் சிவலோகப் பேற்றினை பெற்ற ஆளுடைய பிள்ளை 4,000 தேவாரங்களை 20க்கும் மேற்பட்ட பண்களில் பாடியது வியப்பன்றோ.

"கருவிலே திருவுடையவர்" என்பதனால் மட்டுமே இவ்வரும் சாதனையை அவர் செய்திருக்கலாம் . சுவாமி விபுலானந்தரின் பலதரப்பட்ட சேவைகளு க்கெல்லாம் சிகரம் வைத்தால் போன்றது அவரின் பண் ஆராய்ச்சியாகும்.

மானியூர்
சி.குமாரசுவாமி

பேராசிரியர். பி. சாம்பமூர்த்தி அவர்கள் இசைத் துறையில் பேராசிரியராக சென்னை ஆந்திரா பல்கலைக்கழகங்களில் சேவை புரிந்தவர். சில இசைக்கருவிகளைத் தாமே செய்து பரீட்சித்துப் பார்த்தவர். ஜப்பான் நாட்டு மூங்கிலில் ஒரு கருவியினை அமைத்து அதற்கு பாம்பொலின் என்று பெயர் சூட்டியவர்.

மேலும் வீணையில் சாயுச்சிய வீணை என்ற அமைப்பினை உண்டாக்கியவர். பண்களும் பயின்ற பாவலர். அப்பெரியார் தேவாரப்பண்களைப் பற்றிக் கூறியதைப் பார்ப்போம்.

"இந்தியாவில் தேவாரப்பண்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. வேத கானம் தேவாரத்திற்கு முந்தியதாயினும் அது தாளத்திற்கு அமைத்துப் பாடப்படவில்லை. ஆனால் தேவாரப்பண்கள் தாளத்திற்கு அமைத்துப் பாடப்பட்டன. அவை பக்தியை ஊட்டும் ரக்தி ராகங்களாகும். பிற்காலத்தில் கர்நாடக சங்கீதத்திலுள்ள பல ராகங்கள் உருவாவதற்குப் தேவாரப்பண்களே அத்திவாரம். ஆகையினால் சங்கீத வித்துவான்கள் எல்லோரும் தேவாரப்பண்களில் கவனம் செலுத்துதல் அவசியமாகின்றது.

பண் என்பது பாவோடு அணைதல் என்று கூறப்படுகின்றது. பண்ணிற்கும் பிற்காலத்தில் வந்த இராகத்திற்கும் உள்ள வேறுபாட்டைப் பார்ப்பபோம்.

உதாரணமாக "தோடுடைய செவியன்" என்ற தேவாரத்தின் பண் நட்டபாடையாகும். பண் ஆராய்ச்சியின்படி இதற்குரிய ராகம் கம்பீர நாட்டையும் தாளம் ரூபகமும் ஆகும் நாம் சற்று உன்னிப்பாகப் பார்த்தால் பண்ணிற்குள் ராகமும் தாளமும் அடங்குகின்றன அல்லவா? இதே பண்ணில் அமைந்த "அங்கமும் வேதமும்" என்ற தேவாரத்தில் இராகம் கம்பீர நாட்டை ஆனாலும் தாளம் ஆதியாகும். பண்ணில் எங்கே தாளம் உள்ளது? என்ற கேள்வி எழும் அல்லவா? இதனையே ஓதுவார்கள் கட்டளைபேதம் என்று கூறுவார்கள். தாளம் என்பது சொற்களின் அடுக்கில் உள்ளது. இவை எல்லாம் பண்ணின் நுணுக்கங்கள்.

தமிழக கோயில்களில் பண்ணார் இன் தமிழாய் பாட்டகத்து இசையாய், உள்ள இறைவன் திருமுன் ஓதுவார்களைக் கொண்டு திருமுறைகள், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு , திருப்புராணம் போன்ற திருப்பாடல்கள் ஓதப்படுகின்றன. அப்பாடல்கள் மரபு வழுவாமல் , பண்கள் மாறாமல் பாடப்படவேண்டும் என்று தமிழக அற நிலையத் துறை விரும்புகின்றது. மேலும் தேவாரங்கள் இறைவனுக்குரிய சிறந்த தோத்திரங்களாகும்.

1. ஓதவும் உண்ணவும் உவப்பிலா மகிழ்ச்சியைத் தருவன.
2. சொல்லாட்சி கருத்தாட்சி உள்ளன.
3. செந்தமிழ் மொழிவளம் நிரம்பியன.
4. இசைவளம் மிக்கவை. இன்ப நயம் பயப்பவை.
5. தத்துவக் கருத்துகள் மலிந்தவை.
6. அகப்பொருள் புறப்பொருள் இலக்கணம் உடையன.
7.வன்னெஞ்சமாகிய கன்னெஞ்சத்தையும் உருக்கவல்லன.
8. மெய்யன்புடன் ஓதுபவருக்கு இம்மை மறுமைப் பயனை பயப்பன.

திருமலையிலே பூம்பாவையை உயிர்ப்பிக்கச் செய்ததும் அதே போன்று திருமருகலில் வணிக வாலிபனை அரவந்தீண்டியபின் உயிர் பெறச் செய்ததும் அவிநாசியிலே முதலையுண்ட அந்தணச் சிறுவனை மீட்டதும் அப்பூதியடிகளின் மகனை உயிர் பெறச் செய்ததும் தேவாரத் திருப்பதிகங்களே!

தேவாரங்கள் வேதசாரமானவை. இவை தமிழ் வேதங்கள் என்று சொல்லப்படும். ஆலயங்களிலே பூசையின் பின்னர் வேதம் ஓதப்படும். அதனையடுத்து பஞ்சபுராணங்கள் ஓதப்படும். அதனையடுத்து ஆசீர்வாதம் செய்யப்பட வேண்டும். ஓதுவார்கள் பரம்பரை பரம்பரையாக தேவாரத் திருமுறைகளை நமது பொக்கிசமாகப் பாதுகாத்து வந்துள்ளனர். ஏதேனும் மாறுதல் செய்தால் தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் இடுக்கண் வருமோ என்று அஞ்சி அவற்றின் புனிதத் தன்மை கெடாமல் பாடி வருகின்றார். இவர்களை ஆதரித்து வந்த சைவ ஆதீனங்கள் பல உண்டு. திருவாவடுதுறை, தருமபுரம், மெய்கண்டார் திருப்பனந்தாள் போன்றன தமிழுக்கும் இசைத்துறைக்கும் அளப்பரிய தொண்டாற்றி வருகின்றன.

**பன்னிரு திருமுறைகளையும் பாடுதல் சிரமம் என்ற படியால் ஆலயங்களில் பஞ்சபுராணங்கள் ஓதப்படுகின்றது. முதல் 7 திருமுறைகளிலும் இருந்து ஒரு தேவாரமும் (அதற்குப் பண்ணுடன் ) 8ஆம் திருமுறையாகிய திருவாசகத்தில் ஒரு பாடலும் முல்லைப்பண்ணில் (மோகனராகம்) 9ஆம் திருமுறையிலுள்ள திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பஞ்சப்பண்ணிலும் இறுதியாக 12ஆம் திருமுறையிலுள்ள திருப்புராணம் ஓதப்படுகின்றது. இதன் பின்னரே திருப்புகழோ அபிராமி அந்தாதிப் பாடல்களோ பாடவேண்டும் என்பது நியதி.**

எமது சைவ ஆலயங்களின் தருமகர்த்தாக்கள் தமது ஆலயங்களில் தக்கவர்களைக் கொண்டு பஞ்சபுராணங்களைப் பக்தியுடன் ஓதுவித்தால் ஆலயங்களில் அருள் சாநித்தியம் பெருகும். என்பதில் ஐயமில்லை. தேவாரங்களுக்கு சைவஆலயங்களில் முக்கிய இடம் உண்டு என்று நாம் உணர்ந்து செயற்பட்டு வந்தோமேயானால் எமது சமயம் வளர்ச்சியடையும்.

நம்முடைய காரியத்தில் நமக்கு வெற்றி கிடைக்கும் என்ற மனஊறுதி இருக்குமானால், நேரம் பார்த்து முயற்சியில் ஈடுபடவேண்டிய அவசியம் இல்லை. மனதிலே தயக்கம் இருந்தால், எல்லா வகையிலும் நமக்கு வெற்றிகரமான சூழ்நிலை அமையவேண்டும் என்று அப்படி நல்ல நேரத்தையும் பலத்துக்காகத் தேடுகிறோம்.

# ஐயம் தீர்க்கும் அருளுரைகள்

**இன்றைய வாழ்க்கையில் மதத்தின் காரணமாகவே சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. மதம் இல்லாமல் இருந்தால் நாட்டில் ஒற்றுமை நிலவக்கூடும் என்ற எண்ணமும் தோன்றுகிறது. இப்படிப்பட்ட ஒன்று நமக்கு அவசியம்தானா?**

உலக சரித்திரத்தில் பல தேசங்களில் பல மகான்கள் தோன்றிப் பரத்துவமாய் அமைந்த உண்மைகளை எடுத்துக்கூறி, தங்களைப் பின் பற்ற வைத்துப் பல்வேறு சமயங்களை அமைத்தார்கள். புதுச் சமயங்களைப் போலத் தோன்றினாலும், அவையெல்லாமே நம்முடைய பழைய வைதீக சமயத்தின் அடிப்படைக்கோட்பாடுகளைக் கற்றுத் தெளிந்து, தாங்கள் அறிந்த விதமாக விளக்கம் கூறி எடுத்துச்



சொன்னார்கள் என்பதே உண்மை. இந்தச் சமயங்களின் சில கோட்பாடு, வேறுபாடுகள் ஜனங்களுடைய மனோபாவத்திற்கு இயைந்தபடி இருக்கலாம். ஆனால் எல்லா மதங்களிலும் அடிப்படையாக நம்முடைய வாழ்வு, பக்தி என்கிற ஒரு சமயத்தில் அவசியமான மார்க்கங்கள்தாம் அமைந்திருக்கின்றன. ஆகவே வேதத்தின் சாரமே எல்லா மதங்களும்.

சமயங்களின் கொள்கைகள் வேறுபடலாம். அவைகள் ஒன்றுக்கொன்று முரணாகவும் தோன்றலாம். ஆனால் பக்தி உணர்வு நம்மை ஒன்று சேர்க்கும். நாமெல்லோரும் ஒரே கடவுளின் குழந்தைகள் தாம் என்பதை உணரவேண்டும்.

சமயங்கள் எல்லாமே இறைவனை நாம் அடைவதற்குத் தான் உதவுகின்றன. அவை நம்முடைய சக்திக்கும் ருசிக்கும் ஏற்ப பிரிவுபட்டிருக்கின்றன. பகவான் கீதையில் "மனிதர்கள் என்னை பலவாறாக எந்த ரூபத்திலும் எப்படி வணங்கினாலும் அவரவர்கள் பக்தியை நான் வேரூன்றச் செய்திருக்கின்றேன் " என்று கூறுகின்றார். இதை நாம் அறிந்துகொண்டால் சமயம் காரணமாக சச்சரவு ஏற்பட நியாயமில்லை.

வேறுபட்ட சிக்கல்களில் இருந்து ஒருமையைக் காண நினைப்பதனால் தான் , தேசிய ஒருமைப்பாடு ஒரு சிக்கலான பிரச்சினையாகிவிட்டது. வேற்றுமைகள் எப்போதும் ஒருமையாக மாட்டா. ஆனால் நாம் ஒருமையிலிருந்து வேற்றுமைகளை நோக்கி அவை ஒருமையின் பிரிவுகள் என்பதைக் கண்டுகொள்ளலாம். அப்போது இந்தப் பிரச்சனை எளிதில் தீர்ந்துவிடும். அவ்வண்ணம் தான் உலகப் பெரியோர்கள் எல்லோரும் மொழியையும் மதத்தையும் கருதி உலக அமைதியை நிலை நாட்டினார்கள். உண்மையாகச் சொன்னால் அவர்கள் தாம் ஒருமை ப்பாட்டிற்கு ஆதிகர்த்தர்கள். அவர்கள் எப்போதும் ஒருமையையே கண்டுகளித்து வேற்றுமையை தற்காலிகம் என்று கருதி அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

**காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜயேந்திர சரசுவதி சங்கராச்சாரிய சுவாமிகள் எழுதிய தெய்வவாக்கு என்ற நூலிலிருந்து.**

**□ ஒரு பாவத்தைச் செய்துவிட்ட பின்பு மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் அதன் பாதிப்பு இருக்காது என்று பிறமதங்களில் இருக்கின்றது . இந்து மதம் இப்படி அனுமதிக்கின்றதா ? இல்லை என்றால் இதற்குப் பரிகாரம் என்ன ?**

எந்தக் காரியத்திற்கும் பிரதிபலன் உண்டு என்பது உலகத்தின் இயல். கல்லை மேலே எறிந்தால் அது திரும்பக் கீழே விழுகின்றது. பந்தைச் சுவர் மேல் எறிந்தால் அது திரும்பி வருகின்றது. அதே போல நாம் ஒரு காரியத்தைத் தவறாகச் செய்தோமேயானால், அதன் பலனை நாம் அனுபவித்தேயாக வேண்டும். அதன் விளைவுகளிலிருந்து தப்ப முடியாது. இந்துமதக் கோட்பாடுகள் இதையே வற்புறுத்துகின்றன. தவறு செய்வதும் நாமே. அதற்காக வருந்துவதும் நாமே. ஆகையால் அதைச் செய்யாமலே இருப்பதும் நம் கையில்தான் இருக்கின்றது. தவறுக்குப் பரிகாரமாகவோ, பிராயச்சித்தமாகவோ ஒன்றைச் செய்வதும் நாம் தான். இதற்காக மந்திரங்களையும் சொல்லுகிறார்கள். மீண்டும் அதே தவறைச் செய்யக்கூடாது என்று வலியுறுத்துவதற்காகவும் நமது மனம் சீர் பட்டுத் திருந்த வேண்டும் என்பதற்காகவுமே அது செய்யப்படுகிறது. அப்படிச் செய்வதே நமக்கு மறைமுகமாகக் கிடைக்கும் மன்னிப்புமாகும்.

அதன் பலனாக நல்ல காரியங்களைச் செய்ய முற்பட்டால் இந்த விளைவின் எடையும் குறைந்து போகும். இயற்கை அதை மீறுபவர்களை மன்னிப்பதில்லை . ஆனால் பொறுத்துக் கொள்கிறது. அளவுக்கு மேலே போனால்தான் தண்டிக்கிறது. ஆண்டவன் நம்மை நடத்தும் விதமும்

அதேபோலத்தான். அதைப் புரிந்து கொண்டு நாம் கட்டுப்பாட்டுடன் வாழவும் கட்டுப்படவும் தயாராக இருக்கவேண்டும்.

**–மாதுஸ்ரீ ஜில்லெல்லமுடி அம்மா, டாக்ஸ் வித் அம்மா என்ற புத்தகத்திலிருந்து–**

**☐ என்னுடைய சந்தேகங்களால் ஏற்படும் கேள்விகளை நான் கேட்கும்போது ஆசாரிய புருஷர்களும், ஞானிகளும் கூறும் பதில்களும் கூடக் குழப்பத்தையே அளிக்கின்றன. எல்லோரும் ஒரேவிதமாகப் பதில் சொல்லுவதும் இல்லை. நான் எவ்வாறு தெளிவு பெறுவது.?**

ஒரு பாலத்தைக் கட்ட வேண்டும் என்றால், அதற்கு ஆற்றின் இரு பக்கங்களில் இருப்பவர்களும் முயன்று ஒத்துழைப்பு தரவேண்டும். அதேபோல் ஒரு சந்தேகத்தைத் தெளிவு படுத்த வேண்டுமானால் , விளக்கம் கூறுபவர் செய்யும் முயற்சிக்குக் கேட்பவரும் ஒத்துழைக்க வேண்டும். "ஐயா! இது என்னுடைய சந்தேகம். உமக்குத் தைரியம் இருந்தால் தெளிவுபடுத்திப்பாரும்!" என்று சவால் விடுவதைப்போலப் பேசக்கூடாது. சந்தேகம் ஆசிரியருக்கு ஏற்படவில்லை. கேட்பவருக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. டாக்டரிடம் போகும் நோயாளி "டாக்டர்! எனக்கு வயிற்றுவலி இருக்கிறது. முடியுமானால் காரணத்தைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்! எங்கே? மருந்து கொடுத்து சரி பண்ணி விடுங்கள் பார்க்கலாம்!" என்று சவால் விட்டால் டாக்டர் என்ன செய்ய முடியும்? வயிற்று வலி நோயாளிக்குத்தான் : டாக்டருக்கு இல்லை. குணப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அக்கறை நோயாளிக்கு அல்லவா இருக்கவேண்டும்.? டாக்டர் சொன்ன மருந்தைச் சாப்பிட்டு விட்டு அவர் சொன்னபடி ஆகாரத்தைச் சாப்பிட்டால் தானே குணம் கிடைக்கும்.? அதேபோல நமக்கு ஏற்படும் சந்தேகம் மனத்தைப் பொறுத்தது. ஆகையால் தெளிவு கிடைப்பதற்கு கேட்பவர் தனது மனத்தையும் தயார் செய்து கொள்ளவேண்டும். சொல்வதை ஏற்றுக் கொள்வதற்கு மனப்பக்குவம் பெறவும் முயலவேண்டும். குருநாதர் சொல்வதைக் கேட்பவர் அதற்கேற்ற மனப் பக்குவத்துடனும் , மனத்தளவில் ஒத்துழைப்பு தரும் முயற்சியுடனும் ஏற்றுக் கொண்டால் தெளிவு கிடைக்கும். இல்லாவிட்டால் கிடைக்காது. சிலருக்குத் தாம் நினைப்பதுதான் சரி என்ற எண்ணம் இருக்கும். அதனால் தங்களுடைய சந்தேகத்தைப் பிறர் தெளிவு படுத்த முயன்றாலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அந்தச் சந்தேகத்தை பிடிவாதமாக ஆசையுடன் பற்றிக் கொள்ள முயல்வார்கள். அப்படி இருப்பவர்களுக்குத் தெளிவு கிடைப்பது மிகவும் சிரமம். குருநாதர் சொல்லுவதைக் கேட்டவரும் ஏற்று, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருக்கவேண்டும். ஆசார்ய புருசர்களும் ஞானிகளும் நமது சாஸ்திரங்களையும் தத்துவ நூல்களையுமே படித்திருக்கிறார்கள். அவற்றிலிருந்து தான் பதில் அளிக்கிறார்கள். அதனால் ஒவ்வொருவிதமாக விளக்கம் கூறினாலும் , ஒரே மூலத்திலிருந்து தான் அந்த பதில் வருகிறது. ஆகையால் அதில் வித்தியாசம் இருக்க முடியாது. கேட்பவருக்குப் பக்குவமும் தெளிவான மனமும் இருந்தால், குழப்பம் ஏற்படாது. இல்லாவிட்டால் குருநாதர் எவ்வளவு சிரமப்பட்டாலும் குழப்பம் தெளிவடையவே முடியாது.

**–சுவாமி சின்மயானந்தர், கேள்வி பதில் என்ற சின்மயா யுவகேந்திர வெளியீட்டிலிருந்து–**

**☐ நாம் சாப்பிடும் உணவு எப்படி இருப்பது நல்லது.? அதற்கும் தியான நிலைக்கும் சம்பந்தம் உண்டா? தூக்கத்துக்கும் மன அமைதிக்கும் தொடர்பு உண்டா.?**

நல்ல ஓவியத்துக்கு நல்ல துணி அவசியம். நல்ல கட்டிடத்துக்கு நல்ல செங்கல் அவசியம். நல்ல காரியங்களில் ஈடுபட ஒருவனுக்கு ஆரோக்கியமான நல்ல உடம்பு அவசியமாகவே இருக்கிறது. ஆனால் நல்ல உடம்பிற்குக் கொழுப்புச் சத்து நிறைந்த உணவுதான் அவசியம் என்று சாத்திரங்கள் சொல்லவில்லை. பழங்களையும், சருகுகளையும் உண்ட முனிவர்கள், மாமிச உணவு உட்கொண்ட சக்கரவர்த்திகளைக் காட்டிலும் மேன்மையாக இருந்திருப்பதை நமக்குப் பழம்பெரு நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. நாம் சாப்பிடும் உணவு எளிமையானதாக இருக்கவேண்டும்.காரமும், அதிக வாசனைப் பொருட்களும் சேராத சாத்துவீகமான உணவாக இருக்கவேண்டும். கறிகாய்களை ஓரளவே சமைத்தும் கனிகிழங்குகளைப் பச்சையாகவும்–சமைத்தும் சாப்பிடலாம். பாதி அளவு வேகவைத்த உணவு மனப் பக்குவத்துக்கு உதவும். அரை வயிறு நிரம்பச் சாப்பிட்டு மிகுதியை நீர் குடித்து நிரப்ப வேண்டும். அந்த அளவில் உணவு உட்கொண்டு , இரவு எட்டுமணி நேரத்துக்குள்ளாகத் தூங்கி, விடியற்காலையில் தியானத்தில் ஈடுபடுவது உடலையும் , உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

**–விஜய் மாத்காங்கர், 'Sure Path to True Happiness' என்ற பாரதீயவித்யா பவன் வெளியீட்டிலிருந்து.**

**☐ இசை என்பது கடவுளைப் பற்றியதாகவே இந்து மதத்தில் அமைந்திருக்கிறது. அது ஏன்? பக்தி என்ற ஈடுபாடு இல்லாமல் இசை அனுபவத்தை உணருவது சாத்தியமில்லையா?**

சாட்சாத் பராசக்தியை சங்கீத மூர்த்தியாகப் பாவித்து சியாமளா என்று அழைக்கிறோம். சங்கீதத்தில் தோய்ந்து ஆனந்த மயமாகவும் , சாந்தமயமாகவும், குழந்தை உள்ளத்தோடும் உள்ள சியாமளாதேவியைத் தியானித்தால் அவள் பக்தர்களுக்குக் கருணை பொழிவாள். சங்கீதத்தை இத்தகைய உணர்வோடு அப்பியாசம் செய்யும்போது ஆனந்தம், சாந்தம், மிருதுவான உள்ளம், கருணை ஆகிய எல்லாவற்றையும் அது அளிக்கிறது. வேத அத்தியயனம், யோகம், தியானம், பூசை, இவற்றைக் கஸ்டப்பட்டு அப்பியசித்துக் கிடைக்கிற ஈசுவரானுபவத்தைவிட எளிதாகத் தெய்வீகமான சங்கீதத்தின் மூலம், தாள, ஞான, ராக ரூபத்தில் சௌக்கியமாகவே பெற்றுவிடலாம். அதனால்தான் நமது முன்னோர்கள் சங்கீதத்தை தெய்வ பக்திக்குரிய வடிவமாக வகுத்திருக்கிறார்கள். சங்கீதத்தின் மூலமாகக் கடவுளை வழிபடுகிறவர்கள், அதைக் கேட்கிறவர்களுடைய மனத்திலும் அதேபோன்ற அனுபவத்தைத் தந்துவிடலாம். வேறு எந்த சாதனையிலும் பிறருக்கு இப்படிச் சமமான அனுபவ ஆனந்தத்தைத் தரமுடியாது. சங்கீதம் என்ற மார்க்கத்தின் மூலம் தங்கள் இருதயங்களைக் கடவுளிடம் சமர்ப்பணம் செய்த தியாகராஜ சுவாமிகளைப் போன்ற பக்தர்கள் சங்கீதமே சாஷாத்காரத்தைத் தரும் என்பதற்குச் சாட்சிகளாக இருக்கிறார்கள்.

**–காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சங்கராச்சார்ய சுவாமிகள்–இசை வழியே ஈசுவரானுபவம் என்ற கட்டுரையிலிருந்து–**

# எழுத்துலகில் இளைய நெஞ்சங்கள்

## எனது தோழி

எனது தோழி பெயர் மன்பிரிட். அவளின் தாய்நாடு இந்தியா. என்னுடன் ஆரம்ப பாடசாலையில் படித்தவர். அவவுக்கு விருப்பமான பாடம் ஆங்கிலம். விருப்பமான பிராணி முயல். நாங்கள் முதலாம் வகுப்பிலிருந்து நாலாம் வகுப்புவரை ஒன்றாகவே படித்தோம்.
அநேகமாக நாங்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்தே படிப்போம். விளையாடுவோம். அவவின் பிறந்தநாளிற்கு அவவின் வீட்டிற்குப் போய் பரிசுப்பொருட்களைக் கொடுத்தேன். எனக்கு அவளின் மேல் நல்ல அன்பு. இனிமேல் நான் வேறு பாடசாலைக்குப் படிக்க போகிறேன். இதனால் என்னுடைய அன்பான தோழியைப் பிரியப்போகின்றேன். இதனால் எனக்குச் சரியான கவலை. என்னுடைய தோழியைப் பற்றி நினைக்க எனக்கு பெருமையாக இருக்கின்றது.

ஜெயானி–சீலன்
வயது –11

## என்னால் மறக்க முடியாத சம்பவம்.

ஒரு நாள் இரவு நானும் என் அக்காவும் தங்கையும் தனியாக வீட்டில் இருந்தோம். என் தங்கை நல்ல நித்திரை. வீட்டின் கதவுகளும் யன்னல்களும் பலத்த சத்தமாகத் தட்டிக்கேட்டது. பல ஆண்கள் கதைக்கும் சத்தம் கேட்டது. எங்கள் இருவருக்கும் பயத்தால் இதயமே நின்றுவிடும்போல் இருந்தது. அவர்கள் வீட்டுக்குள்ளேயே வந்து விட்டார்களோ என்று பயந்தோம். நான் அக்காவிடம் ஒரு தடியை எடுத்துத் தரச் சொன்னேன். அக்கா கட்டிலிலிருந்து சத்தம் போடாமல் இறங்கி தடியை எடுத்துத் தந்து விட்டுத் தொலைபேசியை எடுத்துக் கொண்டு வந்தா. எங்களுக்கு பயத்தால் உடம்பெல்லாம் நடுங்கியது. அக்கா உடனே அப்பாவிற்குப் போன் பண்ணினா. நான் பொலிசாருக்கு அறிவித்தேன். 11.30 மணியளவில் சத்தம் நின்றது. கீழே கதவு திறக்கும் சத்தம் கேட்டது. அது பொலிஸ் என்று நினைத்தோம். ஆனால் அம்மாவும் அப்பாவுமே வந்திருந்தார்கள். அவர்கள் வந்த பிறகும் எங்களுக்குப் பயம் போகவில்லை. இந்த சம்பவத்தை இன்று நினைத்தாலும் பயமாக இருக்கிறது.
சமிஸ்ரா சீலன்
வயது 16
ஸ்ரீ மீனாட்சி நடனப் பள்ளி

# உனது கடமை

காலை எழுந்து படித்திடுவாய்
கனிவாய் மொழிகள் பேசிடுவாய்
கடவுளை என்றும் தொழுதிடுவாய்
கடமையை எண்ணி நடந்திடுவாய்

# எனது ஆசை

சின்னச் சின்ன ஆசையல்ல
சிறகடிக்கும் ஆசையொன்று
பெரியதொரு ஆசை
கவிதை எழுத ஆசை!


நி. திவாகரா
வயது *16*
கொழும்பு

# எனக்குப் பிடித்த வாத்தியம்

## வீணை

எனக்கு வீணை நன்றாகப் பிடிக்கும். வீணைக்கு எல்லாமாக ஏழு தந்திகள் உள்ளன. நாலு தந்திகள் வாசிப்பதற்கும் மூன்று தந்திகள் தாளத்திற்காகவும் உள்ளன.என் தாயாரிடம் நான் வீணை கற்கின்றேன். நான் இப்பொழுது சிறிய சிறிய கீர்த்தனைகள் கற்கின்றேன்.வீணையில் பல நுட்பங்களையும் அறிய விரும்புகின்றேன்.

அம்மு வாமனானந்தன்
வயது 5
நால்வர் தமிழ் கலை நிலையம்



பெற்றார்களுக்கொரு அன்பு வேண்டுகோள்!


எழுத்துலகில் இளைய நெஞ்சங்கள் பகுதியை உங்கள் பிள்ளைகளுக்காகவே உருவாக்கியுள்ளோம். எதிர்காலத் தலைமுறைகளாகிய எமது பிள்ளைகள் தமிழில் எழுதவும் தமிழில் சிந்திக்கவும் களம் அமைக்கவேண்டும் என்ற அவாவினாலேயே இப்பகுதியை உருவாக்கினோம். உங்கள் பிள்ளைகளின் ஓய்வு நேரத்தை நன்கு பயன் படுத்துங்கள்.அவர்களை ஊக்குவியுங்கள்.இது அவர்களுக்கு மட்டுமல்ல இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கே அளப்பரிய உதவியாக இருக்கும்.

அன்புடன்
இணை ஆசிரியர்கள்

முருகேசு யோகலிங்கம் ஞாபகார்த்த பரிசுத் திட்டத்திற்கமைய மேற்படி கட்டுரைகளுக்குப் பரிசளிக்கப்படும்.

# HINDUISM

## GENERAL FEATURES



Hinduism is one of the major religions of the world. It is indeed the most ancient among them all .Yet it is still a living religion even today. Hinduism is so old that no one knows when it began . It has no founder or prophet. The popular name of our religion is Hinduism . Infact the proper name for it is the **Sanatana Dharma** which means Eternal Religion.

BY LONDON ADIKAALAR

Hinduism is based on the teachings of the **Vedas and Agamas** Which are our sacred books. These are the oldest religious literature extant today. Hinduism is also called Vaidika Dharma or Vedic religion as it contains the teaching of the Vedas. In addition ,the Agamas are very Ancient and sacred books for Saivite Hindus while the Tantras are sacred for Saktha Hinduism and the Bhagavad Gita is sacred for Vaishnavire Hindus.

The **Maha-Bharata** and the **Ramayana** are two of India's greatest Epics which are of great religious value to Hindus while the **Thirukkural** is an internationally acclaimed work on Ethics which explains the ways of good conduct for a successful life.

**A pious Hindu believes** the following:

1) God is the only power that sustains man and the World .

2) It is God alone who creates, sustains, destroys and renews the world of nature and of all beings at His will.

3) God is present in man as his inner soul or spiritual essence.

4) The purpose of human life is to seek Truth and realise God. This realisation is called Mecca or mufti.

5) Man can do this by living a good moral life and serving his fellow-man and other beings.

6) Hindus believe in the law of Karma (which means the Re-Birth of the soul in another body after death)

**Hindu Religious customs and Practices**

Religion is the backbone of Hindu society and occupies an important place in the life of a Hindu, from birth through growing up, working life, marriage, Parenthood, old age and death. A baby's hair is removed in a ceremony which symbolises leaving the previous life completely behind. The name-giving ceremony for a child involves the selection of one of the many names of a Hindu deity. This serves to remind the person and those who address him or her of the Lord within. Marriage is thought of as far too serious a matter to be left to the chance of romance. So Parents or elders ' arrange' a marriage which is symbolises leaving the previous before a symbolic sacrificial fire. Each Vows to look upon the Divine in human form.


The life of the Hindu is looked upon as a holy pilgrimage made up of four ashrams (stages or stations) involving particular customs , duties etc. appropriate to each station in life. This pilgrimage ends with the realisation of the Self or God who is not only above the heavens but also hidden in the heart of man.

*SHORT STORY*

## THE MESSENGER OF THE MOON-GOD

Long long ago, there occurred a severe drought causing shortage of water all-round. Water became a rare commodity. The earth developed deep crevices and the soil was as dry as dust. All the elephants then went to their king to ask him provide succour to them. The king despatched his squads in search of water. One of them reported, after a day long search ,the existence of a small pond. Happy at getting a chance for their continued survival, they rushed to the spot .

They merrily drank water to their hearts' content and bathed in it lovingly. But while doing so, unknowingly, they crushed many homeless. The poor hares had their abode in the vicinity of that pond.



The elephants arrival caused great panic in the hears' camp.

One day , as the timid creatures gathered together to find a way out of this grim situation , an old hare promised to drive away the pachy-derms from the vicinity of the pond.

So,when the night-fell and the elephants gathered around the lake for their ritual bath,the old hare climbed atop a high hill and yelled aloud : "Stop there,ye all ! I would like to have a talk with your king ! "

The elephants were surprised at this unexpected obstruction. It was difficult for them to locate the source of the thin voice summoning their king. Ultimately they found it and the elephant king reached near the hill.

" Who are you ?" asked the tusker and added: " On whose authority you are stopping us ? I am the king of this herd and I dislike being interrupted. Why have you called me?"

The hare was rather nervous seeing the king of the elephants loosing his cool . Still , he managed to summon enough courage and said ; " I'm the messenger of the moon-god. I have am important message for you; given by him."

At the mention of the moon-god's name the king of the elephants grew very attentive . For the moon -god's authority was unquestioned in the jungle area. The elephant was wise enough to realise the importance of the message. " What is that message ? I' am all ears to get it."

" The moon - god says," began the hare , on a stern note: "That you have done wrong in coming to this pond. You know, unknowingly you have crushed many tiny creatures under your foot. They had been staying here for many years. The lake belongs to us and you had better gone elsewhere."

"Oh I'm really sorry ," replied the elephant , apologising .

"And you have to be very careful in future also. For the massacre of the tiny creature might boomrang upon you in your next life. You are probably not aware of the power of the curse pronounced by the weak. The physical weakness of such being is greatly compensated by the intensity of their feeling . Their curse is as dreadful as the trident of Lord Shiva" warned the hare.

" I admit my mistake. But why should I believe that you are the messenger of the moon-god ? Do you have any proof to support your claim," asked the elephants' king rather bluntly.

" Yes I have," replied the hare with full confidence. " I know you'd ask this question . Well , you can yourself look in the pond. The moon-god is shaking with rage. Now, paying your obeisance to the god, you quickly leave this area. Otherwise...... you know the moon-god's wrath," added the hare with a look of fear.

The elephants knew about the moon-gods wrath. The king looked into the water-- the moon's reflection was shaking as a mild breeze ran over the pond.

The king of elephants was quite convinced that the moon - god was angry " Why he is shaking otherwise " he questioned in his mind.

While the king of the elephants was looking into the water , the hare said in a melodramatic style."O Moon-God, please forgive them. They are leaving at once with their whole tribe. The king of them promises that they would not return here."

The sharp hare had sealed the lips of the elephant's king by his this assurance to the moon-god. The elephants king had no go but to leave the place at once . He immediately summoned his herd-members and told them about the displeasure of the moon-god. They all left at once and the hares lived there happily ever after.

# கலசம் சந்தா விண்ணப்பப் படிவம்

**KALASAM**
**3,GAYFERE ROAD**
**CLAYHALL**
**ILFORD**
**IG5 OJG**
**ENGLAND**

முழுப்பெயர்

முகவரி

தொலைபேசி இல

சந்தா தேவையான காலம்

இங்கிலாந்து :

3 வருடம் (12 பிரதிகள்) £ 9

பிறநாடுகள்:

1 வருடம் (ஐரோப்பா) £6.00

3 வருடம் (ஐரோப்பா) £18.00

ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதமூலம் எம்முடன் தொடர்பு கொண்டு சந்தா விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் .
உங்கள் சந்தாப் பத்திரம் எம்மை வந்தடைந்ததும் நாம் உங்களுடன் மீண்டும் தொடர்பு கொள்வோம்.

கலசத்துக்கு அனுப்பப்படும் காசோலைகள் யாவும் SAIVA MUNNETTA SANGAM (U.K) என்ற பெயருக்கே எழுதப்படுதல் வேண்டும்.

இப் பத்திரத்தைப் பிரதிசெய்து நிரப்பி அனுப்பவும்

திருமுருகா நீ வருவாய் குறைகளெல்லாம் தீர்த்து வைப்பாய் !

# சிவாஸ் (SHIVAS)

**ILFORD** ன் தமிழ்க் களஞ்சியம்

*249 ILFORD LANE (Shell Petrol Station க்கு முன்பாக)*

*ILFORD ESSEX IGI 2SB*

*Telephone: 081- 514 1744*

இலங்கை மற்றும் ஏனைய நாட்டு உணவுகள்,மரக்கறிவகைகள், பழவகைகள்,கடல் உணவுகள், சிற்றுண்டிகள், தமிழ்ப்பத்திரிகைகள்/ சஞ்சிகைகள் , சீடி ஓடியோ கசற்றுகள் வீடியோ பழைய/ புதிய தமிழ்ப்படங்கள்.

விருந்துபசார வைபவங்களுக்குரிய பெரிய சமையல் பாத்திரங்கள்.

GAS அடுப்புகள் வாடகைக்கு, கதிரைகள் வாடகைக்கு(Transport வசதி உட்பட)

அதிசக்தி வாய்ந்த Carpet Shampoo Industrial Machine(நீங்களே இயக்கக்கூடியது) வாடகைக்கு.
சகலவிதமான வைபவங்களுக்கும் தேவையான ருசிமிக்க உணவுகள் யாவும் குறித்தநேரத்தில் உங்கள் இல்லத்திற்கு விநியோகிப்போம்

குறைந்த விலை மிகச்சிறந்ததரம் அன்பு நிறைந்தசேவை

இதுவே எமது உத்தரவாதம்

வேல்முருகன் வருகின்றான் வேதனைகள் போக்க!

# K.S.P SUPER FOODS

## 318 High Street North
## Manor Park

இலங்கையிலும், இந்தியாவிலும் இருந்து தருவிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் ,அன்பளிப்புப் பொருட்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஓடியோக்கள், சீடிக்கள், மற்றும் பழைய புதிய வீடியோ படங்கள் அனைத்தும் மலிவு விலையில் மனநிறைவோடு பெற்றுக்கொள்ள நாடவேண்டிய தரமான நம்பிக்கையான ஓரே ஸ்தாபனம்



**KSP Super Foods**

318,High Street North

Manor Park

London E12 6SA

081 - 471 7806



வேல்முருகா! வேல்முருகா! மால்மருகா! – மக்கள்
குறைதீர்க்க வந்திடுவாய் திருமுருகா!

WITH BEST COMPLIMENTS

**STATION SUPER STORE**
**6 STATION PARADE**
**EAST HAM E6 1JD**
**T.P : 081-503 4711**

ஈஸ்ட்காமில் ஒரு தமிழ்க் களஞ்சியம்
உங்களுக்குத் தேவையான
மளிகைப் பொருட்கள் , மீன்வகைகள் , தமிழ்ப்பத்திரிகைகள் , சஞ்சிகைகள்

**மனநிறைவோடு உங்கள் தேவைகளைப்பூர்த்தி செய்ய**
**ஈஸ்ட்காமில் நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்**

**STATION SUPER STORE**

லண்டனுறை திருமுருகா
நாளுமருள் தாமுருகா!

WITH COMPLIMENTS

**VANEE AGENCY**

ஐரோப்பாவில் முதல் தமிழ்க் கடை
(ஆரம்பம் : *1979*)

317 HIGH STREET NORTH
MANOR PARK
LONDON E12 6SL
TEL: 081- 471 8366

With Compliments

***K.R.GIFT SHOP***

உங்கள் தேவைகளான
இந்திய எவர்சில்வர் பாத்திரங்கள், வீட்டுப்பாவனைப் பொருட்கள்
சமையற் பாத்திரங்கள், பூசைத்திரவியங்கள்,
மின்சாரப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள்,
திருமணப் பரிசுப் பொருட்கள்,
பல்வேறு விதமான பட்டாசு வகைகள், வாழ்த்து மடல்கள்,
ராக்கிகள் , கரம் போட் , இந்தியப் புத்தகங்கள், கைக்கடிகாரங்கள்,
மணிக்கூடுகள் மேலும் பல இந்தியப் பரிசுப் பொருட்களுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஓரே விநியோகஸ்தர்

**K.R. GIFT SHOP**
378 ROMFORD ROAD
LONDON E7 8BS
TEL: 081-470 0486

உ

தேரேறி வருகின்ற திருமுருகா உனது
அருள் வேண்டி நிற்கின்றோம் வாமுருகா!




# CHITHAARA
சித்தாரா உணவகம்

# RESTAURANT

**FULLY LICENCED**

**SRI LANKAN AND SOUTH INDIAN CUISINE**

**ENJOY THE REAL TASTE OF DELICIOUS SRI LANKAN AND SOUTH INDIAN FOOD**

**TAKE AWAY SERVICE AVAILABLE**
**PARTIES AND WEDDINGS CATERED FOR**

**211,THE BROADWAY**
**WEST HENDON**
**LONDON**
**NW9 7DE**
**081-202 3486/87**

**18,THE AVENUE**
**WEST EALING**
**LONDON**
**W13 8PH**
**081-810 6606/07**
***(BUSINESS LUNCH-12.00NOON TO 3.00p.m)***

**OPEN: MONDAY TO SATURDAY (EXCEPT TUESDAYS)**
**12.00 NOON TO 3.00p.m. & 6.00p.m TO 11.30p.m**
**SUNDAY (BUFFET LUNCH)**
**12.00 NOON TO 3.00p.m. & 6.00p.m TO 10.30p.m**


சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு, ஐரோப்பாவில் தரமான செல்வம் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டு சைவ முன்னேற்ற சங்கத்தால் 15.08.1993 அன்று வெளியிடப்பட்டது.